தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 சிலை 4 | (19 - 12 - 1982) | விலை 65 காசு | இதழ் எண் : 7 | பகுதி 7

★ தமிழ்த் திரைப்படத்தில் இந்திப் பாடல்!

★ திரைப்பட வாணிகர்களால் தமிழ்மொழிக்கும், தமிழ்க்கலை, பண்பாடுகளுக்கும் நேரும் கொடுமை!

★ 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்று கொள்கை முழங்கும் அரசு இதுபோலும் தமிழ்க் கேடுகளுக்கு ஒரு பொது நெறி வகுக்கக்கூடாதா?

★ தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் மட்டுமன்று; தமிழ்க் கலையில், தமிழ் நூலில், செய்தித்தாளில், தமிழ் வீடுகளில், ஏன், தமிழர் வாய்களில்கூட தமிழ் இல்லை!

★ இத் தாறுமாறான தமிழ்மொழி அழிப்பு முயற்சிகளைக் கண்டித்து உ. த. மு. க. மாவட்ட, வட்டக் கழகங்கள் கண்டனக் குரல் எழுப்புக!



கழக முதல்வர் பாவலரேறு வேண்டுகோள்!

தமிழ் நாட்டில், உள்ள தமிழ்த் திரைப்பட முதலாளிகள் பெரும்பாலும் வாணிக நோக்கம் கொண்டவர்கள். பண வருவாய் ஒன்றே கருதும் மனவுணர்வுள்ளவர்கள். அவர்கள் தமிழ்மொழி வளர்ச்சி பற்றியோ, தமிழ்க் கலை, பண்பாடுகள் பற்றியோ சிறிதும் கவலைப் படாதவர்கள். திரைப் படங்களில் கதைகள், பாடல்கள். உரையாடல்கள் எழுதுவோரும், அத் திரைப்பட முதலாளிகளின் பண வருவாய்க் கொள்கைகளுக் கேற்பவே, எப்படி எழுதினால் பணம் வருமோ, கவர்ச்சி மிகுமோ அப்படி எழுதித் தமிழ்மொழியின் பெருமையைக் குலைப்பவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் நாட்டின் எந்தக் கலைக் கூறுகளையும் இவர்கள் பின்பற்றுவதில்லை. வட இந்திய இசை, மேனாட்டு இசை, பாணி, நடை போன்றவற்றையும் இந்தி, ஆங்கில, உருது போன்ற வேற்று மொழிச் சொற்களையும் தங்கள் மனம் போனவாறு கலந்தே அவர்கள் தமிழ்ப் படங்களை உருவாக்குவது பெரும் மானக் கேடாக உள்ளது. பெரும் வருத்தத்தைத் தருகிறது. பொதுமக்கள் விரைந்து பண பற்றத் தக்க, வலிந்த கருத்துப் பரப்புக் கருவியாகிய திரைப் படத்தை இவர்கள் பணம் பெருக்குவதற்காகத் தாறுமாறாகக் கையாள்வது நம் கெட்ட காலமே! திரைப் படங்களில் நடிக்கப் பெறும் நடிப்பைப் பற்றியோ, அதில் காணப் பெறும் அருவருப்பைப் பற்றியோ சொல்லவே தேவையில்லை. மொத்தத்தில் திரைப் படங்களின் கீழ்மையான போக்குகளால் இந் நாடே கெடுகிறது; கீழ்மையுறுகிறது.

அண்மையில் மதுரைத் தினமணிப் பதிப்பில் (4-12-82—6-ஆம் பக்கத்தில்) ஒரு செய்தி வந்தது.

"ஜூபிலி கிரியேஷன்ஸ் தயாரிக்கும் பிரமசாரிகள் வண்ணப் படத்தில், தமிழ் இந்தி கலந்த பாடல் ஒன்று இடம் பெறுகிறது. எம். எசு. விசுவநாதன் இசையமைப்பில் மலேசிய வாசுதேவன், சுரேந்தர், விஜயரமணி பாடிய பாடல் வாகினியில் பதிவாக்கப் பெற்றது."

இதற்கு முன்னேயே தமிழக அரசின் பாரதிதாசன் பரம்பரைப் பரிசு பெற்ற திரைப் படப் பாடலாசிரியர் ஒருவர், 'டாடி டாடி' 'பேட்டா பேட்டா' என்னும் எடுப்புக் கொண்ட ஒரு பாடலைப் பாடும் திரைப்படம் ஒன்று வெளிவந்து தமிழ் மொழிக்கு இழுக்கைத் தேடித் தந்துள்ளது. இப்பொழுது மீண்டும் இந்திப் பாடல் நுழைய வுள்ளது. அந்தத் திரைப்பட நிறுவனத்தின் பெயரே (ஜூபிலி கிரியேஷன்ஸ்) தமிழ் மொழியில்

(3-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய எழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ ஒன்றுமேயில்லாத ஈக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து புலிகள் மேல் படையெடுப்பதைப் போன்ற முயற்சிகள்தாம் தமிழர்கள் இக்கால் செய்கின்ற உரிமை முயற்சிகளும்!

★ இளைஞர்களுடைய சிந்தனை தமிழர்களின் அறிவைப்பற்றி, உரிமையைப்பற்றியதாக இருக்க வேண்டும்!

★ பாவலரேறு அவர்களின் சிறப்புரைத் தொடர்ச்சி!

சென்னை—19

கடந்த 7-11-82-இல் சென்னையில் நடந்த 'தமிழ்நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆற்றிய உரையின் 4-ஆவது தொடர்ச்சி வருமாறு:

பெரிய பொருளியல் நிலையிலே நாமெல்லோரும் ஏதோ ஒரு வகையிலே தாழ்ந்திருக்கின்றோம், எல்லாரும் ஏழையர் தாம்! அழகாகச் சொன்னார்கள். நமமுடைய நாட்டிலே நம்முடைய சென்னையிலே போய், தெருவிலே பார்த்தால், ஏராளமான நடைபாதைக்குடும்பங்களைப் பார்க்கிறோம்! ஆனால், அந்த நடைபாதைகளுக்குப் பக்கவாட்டிலே, வளர்ந்திருக்கின்ற மாடமாளிகைகளிலே வாழுகின்றவர்களைப் பட்டியல் எடுத்தால் எல்லாரும் வேற்று மொழிக்காரர்கள், வேற்று இனத்தவர்களாக இருப்பதை இந்த நாட்டிலே தவிர, வேறு எந்த நாட்டிலும் நீங்கள் பார்த்திருக்க முடியாது. (கைதட்டல்) இந்தத் தமிழ் நாட்டிலே ஒன்றிலே தான் நீங்கள் இந்தக் காட்சியைக் காண முடியும்! அதே போல், மராட்டியத்திலே பம்பாயிலே போய்ப் பார்த்தால், தமிழர்கள் எந்த ஒரு மாடிக் கட்டிடத்திலே கூட வாழ்வதை நீங்கள் பார்க்க முடியாது. தனக்கென ஒரு சொந்தக் கட்டிடத்திலே வாழ்கின்ற தமிழர்கள் மிக மிக எண்ணிக்கையிலே குறைவானவர்கள்; அந்த மராட்டியத்திலே; பம்பாயிலே! நான் எதற்குச் சொல்கிறேன்! அங்கு வாழுகின்ற தமிழர்களின் நிலையை நான் கேள்விப்பட்டதைவிட, நேரிலே பார்த்த பொழுது மிக வருந்தினேன்! மிக இழிவான குப்பைகள் நிறைந்திருக்கின்ற இடம், சாய்கடைகள் வந்து ஒன்றாகக் கூடுகின்ற இடத்திலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! அந்தத் தமிழர்கள் எப்படித் தங்களை உணர்ந்து கொள்ள முடியும்? அந்தத் தமிழர்கள் எப்படிச் சிந்திக்க முடியும்? அந்தத் தமிழர்கள் எப்படித் தாங்கள் அடிமைப்பட்டிருப்பதை உணர முடியும்? எப்படித் தங்களுக்காக அந்த உரிமை உணர்ச்சிக்காகப் போராட முடியும்? எப்படி அந்தப் போராட்டத்தை அவர்கள் தலைமை தாங்கி அல்லது ஒருமுகப்பட்டு நடத்திவிட முடியும்? அப்படியே நடத்தினாலும் அங்கு வருகின்ற அழிவை எப்படித் தடுத்துக் கொள்ள முடியும்? எண்ணிப் பாருங்கள்! எனவே தான், மிக வலிந்த இனமான இன்றைக்குப் பஞ்சாபிலே நடக்கின்ற அந்தப் போராட்டத்தை மிக வலிந்த அறிஞர்கள் நடத்துகிறார்கள்! அப்பொழுது கூட அந்த இயக்கத்தை நசுக்குவதற்குப் பல வகையான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. ஒன்றுமேயில்லாத ஈக்களெல்லாம் சேர்ந்து புலிகள் மேல் படையெடுப்பதைப் போன்ற முயற்சிகள்தாம் தமிழர்கள் இக்கால் செய்கின்ற உரிமை முயற்சிகளும்! இதிலே, நமக்குத் தேவை ஒரே ஓரிணைப்பு! ஒரே ஒற்றுமை! ஒரே உள்ளம்! நம்முடைய எல்லா வகையான அடிமை உணர்ச்சிகளும், அடிமைத் தளைகளும் நீக்கப்பட வேண்டும்; உடைத்தெறியப்பட வேண்டும்! தகர்த்தெறியப்பட வேண்டும். இந்த உணர்ச்சி நம் அனைவருக்கும் தோன்ற வேண்டும். இல்லாவிட்டால் நாம் முன்னேறவே முடியாது. மற்றபடி உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்பது எல்லாரையும் பணக்காரர்களாக்கி விடுகின்ற அல்லது செல்வர்களாக்கி விடுகின்ற கழகமா? இஃது, உண்மையான முன்னேற்றத்துக்கு உதவுவது! அவர்களுடைய வாழ்க்கையிலே அறிவு முன்னேற்றம் உரிமை முன்னேற்றம் எல்லா வகையான முன்னேற்றங்களும் தேவை!

இந்த நாட்டைப் பார்த்தால் தெரியும்! இந்த நாட்டிலே எவ்வளவு இழிவான போக்குகள்! இளைஞர்கள் யாராவது மக்களைப்பற்றிச் சிந்திக்கிறார்களா? இளைஞர்கள் ஏதாவது அவர்கள் மொழியைப் பற்றியோ, இந்த இன முன்னேற்றத்தைப் பற்றியோ சிந்திக்கிறார்களா? இந்த நாட்டைப் பற்றிச் சிந்திக்கிறார்களா? எண்ணிப் பாருங்கள்! எந்த வகையிலும் அவர்களுடைய எண்ணங்கள் அதிலே போய்ப் படிவதில்லை! எப்படி இந்த இனம் முன்னேறும்?

எனவேதான், பலவகையான நிலைகளிலே, நாங்கள் அந்த ஏழு கொள்கைகளை உண்மையான உழைப்புடை நாம் அந்த இயக்க அடிப்படையிலே நின்று தருவோமானால்; கட்டாயம் விளைவு கிடைக்கும்! மிக அண்மையில் என்று சொல்ல முடியாமல் போனாலும், மிகவும் சேய்மையிலே அதை நாம் தள்ளிப்போட முடியாதபடியான விளைவை உருவாக்க முடியும்! அந்த நிலைகளைத் தாம் நாங்கள் உறுதிப்படுத்திக் கொண்டு, அந்தக் கருத்துகளை மக்களிடத்திலே கொண்டு செலுத்துவதற்கு, ஒரு தொடர்பு நமக்கு வேண்டும் என்று கருதினோம். அதை நம்மால் உண்மையாகவே, முழுமையாகவே, வலிவான ஒன்றாகக் கொடுக்க முடியாது. ஏனென்றால், ஓரிதழ் நடத்துவதென்பது இலக்கக்கணக்கான பணம், கோடிக்கணக்கான பணத்தை முதலீடாக வைத்துக் கொண்டு நடத்தவேண்டும்! நம்முடைய ஆறு. அழகப்பனார் அவர்கள் சொன்னார்கள். 'ஜலம்' என்று போடுகின்றான் தினமணியிலே என்று. 'ஜலம்' என்று போடுவது எவ்வளவோ தாழ்வில்லை! எவ்வளவோ, அது நமக்கு விளங்குகின்ற சொல்லாகக்கூட இருக்கிறது. இன்னுங் கொஞ்சம் நாள் போனால், இந்தியிலே அந்தச் சொல்லைச் சொல்லுகின்ற பொழுது, நமக்கு இன்னமும் இழிவாகப் போய்விடும். அதனால் தான், மொழி என்பது தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றது! இனி எதிர்காலத்திலே அது இருக்குமோ இருக்காதோ, தெரியாது! அந்த நிலையிலே தமிழ்மொழியை நாம் பேண வேண்டும். அதற்குத் தான் இந்த இயக்கத்திலே, இந்தத் தமிழகத்திலே, 'தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்' என்பதை முதல் கொள்கையாக வைத்தோம்!

சில பேர் சொல்லுகிறார்கள்! மொழியிலே என்ன இருக்கிறது என்று! ''அது மக்கள் எல்லோருக்கும் விளங்க வேண்டும்! ''பேச வேண்டும் அவ்வளவு தானே! பேசினால் நம்முடைய ஒருவர் கருத்து மற்றவருக்கு விளங்க வேண்டும்!'' எவ்வளவு எளிமையாக இருக்கிறது பாருங்கள்! எவ்வளவு எளிமையாக மக்களுக்கு அறியாமையைப் புகுத்துகிறார்கள்; பாருங்கள்! மொழியிலே என்ன இருக்கிறது என்று சொன்னால், மொழி இருந்தால் தானே ஓர் இனம் இருக்கும்! தமிழ் மொழி என்று சொன்னால் தானே, தமிழினம் என்று சொல்ல முடியும்! தமிழ் மொழி இல்லாத போது; இனம் எங்கு வரும்? அதனால் தான் மொழியை அடிப்படையாகக் கொண்டு தான் ஓர் இன உணர்வை மக்களிடத்திலே ஊட்ட முடியும்! அதுவும், தமிழ் மொழியைக் கொண்டுதானே தமிழர்களுக்கு உணர்வை, அறிவை உண்டாக்க முடியும்!

அடுத்தபடி, நம்முடைய ஆட்சிமொழிக் காவலர் இராமலிங்கனார் அவர்கள் விளக்கினார். தமிழின முன்னேற்றக் கழகம் என்பது தமிழ் மொழி பேசுகிறவர்களை மட்டுமே வைத்துச் சொன்னது அன்று. ''தமிழ் இனம்'' என்ற சொல்லிலே தமிழ் மொழி பேசுகிறவர்களும், அந்தத் தமிழ் இனக்கிளை மொழிகளாக இருக்கின்ற, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் போன்ற மொழிகளைப் பேசுகிறவர்களும் சேர்ந்தவர்கள் தாம்! திராவிடம் என்கின்ற அந்த வடசொல் அமைப்புக்கு, தமிழினம் என்பது, ஒரு தூய தமிழ் அமைப்பு என்பதாக விளக்கினார்கள். பொதுவான விளக்கம்; ஓர் அளவிலே உண்மையான, சரியான விளக்கம் என்று கூடச் சொல்லலாம்! தமிழர்களே கூட, தங்களை உண்மையான தமிழர்கள், தமிழினம், திரவிட இனம் என்று சொல்லிக் கொள்ளுவதிலே பல வகையான கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறார்கள்.

ஓர் இனம் என்பது மொழியின் அடிப்படையிலே தோன்றியது; தோன்றுகிறது. அப்படிப்பட்ட இனம் பல வகையான கால இட நிலை, வேறுபாடுகளாலே மொழித்திரிபு கொண்டு, பல வேறு குழுக்களாகப் பிரிந்து, வாழுகின்றன! இனம் என்று சொல்லுகின்ற அளவிலே, தாய்மொழி, தொடக்கத்திலே மூலமொழியாக இருந்த மொழி எதுவோ அதனுடைய இனந்தான் அனைத்து இனமும்! மற்றபடி இடம் வேறுபட்டாலும், மொழிச் சிதைவு ஏற்பட்டாலும், அது வேறு இனம் என்று சொல்லிவிட முடியாது! இனம் என்கின்ற வகையிலே அந்த மூலமொழி இனமாகத் தான் ஓர் இனம் இருக்க முடியும்!

ஆனால், தமிழ் இனத்தைப் பொறுத்த அளவிலே திரவிட மொழிகள் என்பவை, இந்தியாவில் இருக்கின்ற ஏறத்தாழ இருபத்தொரு மொழிகள் என்று திரவிட மொழிகளை அறிஞர்கள் குறிக்கிறார்கள். இந்த 21 மொழிகளையும் சேர்த்து, ஒரே இனமாகக் குறிக்கின்ற ஒரு தன்மை நமக்குத் தேவையா? அல்லது தமிழினம் என்று சொன்னால், அவர்களெல்லாம் ஒப்புக்கொள்ளுவார்களா? கருநாடகத்திலே அவர்கள் தண்ணீர் விடமாட்டேன் என்கிறார்களே! அவர்கள் திரவிட இனத்தார் தானே! தமிழ் இனத்தார் தானே, என்று நீங்கள் கூறலாம்! இந்த இடத்தில் நீங்கள், ஒன்றை மறந்துவிடக் கூடாது!

நாம் ஒன்றாக இருக்கின்ற தமிழர்களுக்குள்ளேயே எத்தனை வேறுபாடுகள் இருக்கின்றன என்று எண்ணிப் பாருங்கள்! தமிழர்களுக்குள்ளேயே பலவகையான வேறுபாடுகள் இருக்கின்ற பொழுது ஒருவரையொருவர் வாழவிடாமல் செய்கின்ற மனப்போக்கு வளர்ந்திருக்கின்ற பொழுது, திரவிட இனத்துக்குள் உண்மையாக ஒற்றுமை ஏற்பட, ஒரு வாய்ப்பு இருகின்றதா? திரவிட இனம் பிரிக்கப்பட்ட பொழுதே ஓர் அழிவை நோக்கித் தான் பிரிக்கப்பட்டது. இந்த இனம் உண்மையான ஒரு முன்னேற்றத்தை எய்தக் கூடாது. அது பல வகையிலும் தாழ்ச்சியுற வேண்டும் என்கிற நோக்கத்தோடேயேதான் அந்தத் திரவிட இனம் கூறு கூறாகப் பிரிக்கப்பட்டது. அப்படிப் பட்ட பிரிவு ஏற்பட்டாலும், ஒரே தாய்மொழியினத்தைச் சேர்ந்த பிரிவுகள் இவை. இப்படிப்பட்ட நிலையில், எப்படி நாம் தெலுங்கு பேசுகிறவர்களை, கன்னடம் பேசுகிறவர்களையெல்லாம் இந்த இயக்கத்திலே சேர்க்க முடியும்? தமிழினம் என்றால் அவர்கள் சேருவார்களா என்று சிலர் என்னைக் கேட்பார்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், முதலிலே தமிழ்

(3-ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் போராட்டம்!

தனித்தமிழ் நாட்டு விடுதலைப் போராட்டத்தை நான் இன்னும் கைவிட்டு விடவில்லை; தென்னிந்தியர் மேல் வடநாட்டினர் இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதனால் நாட்டு விடுதலைப் போராட்டத்தை மீண்டும் நான் தொடங்குவேன்.

—பெரியார் வேலூர் பேச்சு.
மே 1965.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
என்வே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 19-12-82—இதழ் எண்: 7 | பகுதி 7

மக்கள் போராட்டங்கள்!

நாட்டில் மக்களிடம் உரிமை உணர்வு மிகுந்து வருகிறது என்பது, இப்பொழுது ஆங்காங்கே நடந்து வரும் போராட்டங்களாலேயே நன்கு தெரியவரும். ஆனால் மாநில அரசோ சரி, நடுவண் அரசோ சரி. அந்தப் போராட்டங்களைக் காவல்துறையினரைக் கொண்டு, அடக்குவதும், ஒடுக்குவதும், மிக எளிதாகச் சிறைப்பிடிக்கச் செய்வதும், இரக்கமற்ற நிலையில் சுட்டுத் தள்ளுவதும் மிகக் கொடுமையான, நேர்மையற்ற கடைப்பிடிப்புகளாக இருக்கின்றன.

அறிவும், அறிவியலும் வளர்ச்சி பெற்று வரும் இந்தக் காலத்தில், அறிவுள்ள மக்களினத்தின் தேவைகளையும் குறைகளையும், அறிவதும், அவற்றை நிறைவு செய்து மக்களினத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சமநிலைக்குக் கொண்டு வருவதும் ஆட்சியைக் கைப்பற்றுவோரின் பெருங் கடமைகளாக இருக்க வேண்டும்.

ஆனால், இந்நாட்டில் ஆட்சி அதிகாரங்கள், பொருளுள்ளவர்களின் கைகளுக்கே கிடைக்கும்படியான, முதலாளியச் சூழ்நிலை உள்ளதால், ஆட்சிக்கு வருபவர்கள் எப்பொழுதும் மக்களுடைய உணர்வுகளையும் உரிமைகளையும் தேவைகளையும், அவற்றின் விளைவாக எழும் கிளர்ச்சிகளையும், போராட்டங்களையும் மதிப்பதோ, அவை தோன்றாமல் செய்யும் வகையில் மக்களுக்கு நயமை வழங்குவதோ இயலாமல் இருக்கிறது. இதற்கு மாறாக, மக்களின் எழுச்சிகளை அடக்கி,ஒடுக்குவதே ஆட்சியாளரின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இது பெரிதும் வருந்தத் தக்கதும், நாகரிகமற்றதும், காட்டு விலங்காண்டித்தனமானதுமாகும். இந்தநிலை மாற வேண்டும். அல்லது அதை மாற்றும்படி மக்கள் ஒருமனதாக முனைய வேண்டும்.

அண்மையில், தமிழ் நாட்டில் ஆசிரியர்கள் கிளர்ச்சி, அரசு ஊழியர்கள் கிளர்ச்சி, தொழிலாளர்கள் கிளர்ச்சி முதலியவை முன்னைவிடப் பன்மடங்கு வலிவான முறையில் நடத்தப் பெற்றன; நடந்தும் வருகின்றன. நீண்டநெடுங் காலமாக நடந்து வரும் உழவர் போராட்டங்கள் இன்னும் முடிவடைந்தவாகத் தெரியவில்லை. அவர்களின் கோரிக்கைகளையும் அரசு மதிக்கவில்லை ஆட்சி என்றால் மக்களை அடக்குவதும் காவல்துறையினரை விட்டு அடித்து நொறுக்குவதும் என்றே அரசியல் அகர முதலியில் பொருள் வந்துவிட்டது.

குடியரசு நாட்டில், மக்களுக்குக் கொடுக்கும் சட்ட மதிப்பை விட, அவர்களின் கருத்துகளுக்குக் கொடுக்கும் மனவியல் மதிப்பே மிகுதியும் வேண்டப்படுவதாகும். சென்ற கிழமையில் குடி தண்ணீருக்காகப் போராடிய பெண்களையும் காவலர்கள் அடித்து உதைத்து விரட்டியிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களைச் சிறைப்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் கொடுமையானதும் கொடுங்கோன்மை மிக்கதும ஆகும்.

தண்ணீருக்கும் உணவுக்கும் போராடும் மக்களை ஓர் அரசு மதிக்காமல், அவர்களுக்கு இரக்கம் காட்டாமல், கொடுமை செய்யுமானால், வேறு எத்தகைய வாழ்வியல் உரிமைகளைத்தாம் அது அவர்களுக்கு வழங்கிவிட முடியும்? ஆட்சி என்பது அடக்குமுறையைக் கையாள்வதன்று மக்கள் தேவைகளை நிறைவு செய்வதே ஆகும். மக்கள் எழுச்சிகளின், கோரிக்கைகளின் அடிப்படைகளைக் கண்டறிந்து, அவற்றைத் தீர்த்து வைக்கின்ற முயற்சியையே ஓர் அரசு செய்தல் வேண்டும். அவர்களைக்கொன்று குவிப்பதே ஆட்சியின் நோக்கமாக இருத்தல் கூடாது. அத்தகைய அரசு முறை ஒரு குடியரசு நாட்டில் முற்றிலும் தவிர்க்கத்தக்கதாகும்.

நாட்டில் பொருளியல், குமுகவியல், வாழ்வியல் ஏற்றத் தாழ்வுகள் உள்ள வரை, மக்கள் கோரிக்கைகளை எழுப்பியே தீருவர். அக்கோரிக்கை கவனிக்கப் பெறாமலும், புறக்கணிக்கப் பெறுவதுமாக இருந்தால், கிளர்ச்சிகளும் போராட்டங்களும் உருவாகத்தான் செய்யும். மக்கள் கோரிக்கைகள் போராட்டங்களாக வெடித்த பின்னர், அரசு அவற்றை அடக்குவதையே தன் ஆளுமைத் திறனாகக் கருதிவிடக் கூடாது. அந்த ஆளுமைதான் இப்பொழுது பொதுவாக இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் நடைபெற்று வருகிறது.

ஏழ்மையில் நீண்டநெடுநாட்களாகத் துன்புற்று வாழ்கின்ற மக்கள், தங்கள் ஏழ்மைக்கும், நலிவுக்கும் காரணமாகவுள்ள குமுகாயக் கேடுகளையும் கேடர்களையும் எழுச்சி கொண்டு அடக்கவும் அழிக்கவுமே முனைவார்கள். அந்த முனைப்பைக் குமுகாயப் போராட்டமாகக் கொள்ள வேண்டுமே தவிர, வன்முறைப் போராட்டமாகக் கருதி, அத்தகைய போராட்டக்காரர்களை ஒழிப்பதிலும் அழிப்பதிலுமே அரசு முனைப்புக் காட்டக்கூடாது.

வடவார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் எழும், வாழ்வியல், பொருளியல் போராட்டங்களை அடக்குவதற்கென்றே ஒரு காவல்துறைப் பிரிவை ஒதுக்கி, அதற்குக் கொடுமை நிறைந்த ஒரு காவல் அதிகாரியைத் தலைவராகப் போட்டிருப்பது, குடியரசுக் கோட்பாட்டிற்கே இழுக்குத் தருவதாகும். அவ்வதிகாரி நூற்றுக்கணக்கான இளைஞர்களைத் தம் மனம்போனவாறு சுட்டுத்தள்ளுவதும், அவர் செயலை அரசு மதித்துப் பாராட்டுவதும் கொடுமையிலும் கொடுமையாகும்!

இத்தகைய மக்கள் போராட்ட எழுச்சிகளுக்கு என்ன காரணம் என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் எப்பொழுது தான் சிந்திக்கப் போகிறார்களோ, அவற்றுக்குரிய தீர்வு காணப்போகிறார்களோ, தெரியவில்லை. அந்த நிலை விரைந்து உருவாகாதவிடத்து, மக்களே, அவற்றுக்கொரு முடிவைச் காணவேண்டிய கட்டாயம் ஒன்று வரவே செய்யும் என்று ஆட்சியில் உள்ளவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாத தன்மையை நாம் உணர வேண்டும். அவர்கள் எடுக்கும் திரைப் படத்தின் பெயர் 'பிரமசாரிகள்'! தமிழ் அவர்களால் எப்படி வளரும்.

ஏற்கனவே தமிழ் நாட்டில் இந்திப் பெயர்கள் தமிழ் நாடெங்கும் நடுவண் அரசுச் செயலகங்களில் எழுதப்பெறுவதும், இந்தித் திரைப்படங்கள் நாடெங்கும் காட்டப் பெறுவதும், நடுவணரசு முன்னின்று நடத்தும் பல நூற்றுக்கணக்கான ஆங்கில வழிக் கல்வி பயிற்றும் பள்ளிகளில் இந்தி கற்பிக்கப் பெறுவதும் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மொழிக்கு வந்த பேரவல நிலையாகும்.

தமிழ்நாட்டில் தான் தமிழுக்குக் கேடு பயக்கும் இத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன. அத்துடன் திரைப் படவாணிகர்களால் தமிழ் மொழிக்கும், தமிழ்க்கலை, பண்பாடுகளுக்கும் நேரும் கொடுமை வேறு! 'தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ் தான் இல்லை' என்று மனம் நொந்து பாடினார் பாரதிதாசன். ஆனால் தமிழ் நாட்டின் தமிழ்க் கலைகளில், தமிழ் நூல்களில், தமிழ்ச் செய்தி தாள்களில், தமிழர் வீடுகளில், ஏன். தமிழர்தம் வாய்களில்கூட, தமிழ் இல்லை! இதை நினைக்கையில நெஞ்சு வேகிறது; வெடிக்கிறது!

'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்று தமிழக அரசு கொள்கை முழக்கம் செய்கிறது. ஆனால் இதுபோலும் தமிழ்க் கேடுகளுக்கு ஒரு முடிவு கட்டக் கூடாதா?

எனவே, ஆயிரக்கணக்கான திரையரங்குகளில் தொடர்ந்து சில ஆண்டுகளுக்கேனும், ஒலிக்கப் போகும் அத்திரைப்படத்தின் இந்திப் பாடல் நுழைப்பைத்தவிர்க்க முயற்சி செய்தல் வேண்டும். மொழி, இன உணர்வுள்ள தமிழர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால், இந்த 'ஜூபிலி கிரியேஷன்ஸ்' உருவாக்கும் 'பிரமசாரிகள்' படத்தில் இந்திப் பாடல் வராது.

ஆங்காங்குள்ள உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாவட்ட வட்டக் கழகங்கள் ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, முடிந்த அளவில் பொது மக்கள் கையெழுத்து வாங்கி, இசையமைப்பாளர் திரு.எம். எசு. விசுவநாதனுக்கும், அவர் வழி அத்திரைப்பட நிறுவனத்திற்கும் உடனே அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன். அந்த இந்திப் பாடலுடன் திரைப்படம் வருதல் கூடாது. கழகச் சார்பாக அன்றித் தமிழன்பர்களும் மடல்கள் வழியாகத் தங்கள் கண்டனங்களை உடனே தெரிவிக்கவும். முடிந்தால் தமிழ் நிலத்திற்கும் செய்தி அனுப்புங்கள். இசையமைப்பாளர் முகவரி: திரு.எம். எசு. விசுவநாதன், 7, பி, மௌபரீசு கார்டன் சாலை, தேனாம் பேட்டை, சென்னை-18.

-பெருஞ்சித்திரனார்

ஒன்றுமேயில்லாத ஈக்கள் எல்லாம்...

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

னம் என்பதைத் திரவிட இனமாக நாம் கொண்டு, நாம் சில முயற்சிகளைச் செய்ய வேண்டும். அடுத்தது, அவர்களை நாம் தவிர்த்து விட வேண்டும் என்று சொல்லவில்லை! இந்த நாட்டிலே இரண்டேயிரண்டு இனங்கள் தாம் உண்டு! ஒன்று ஆரிய இனம்! இன்னொன்று திராவிட இனம். அந்த இனத்தினுடைய செயற்பாடுகள் அனைத்தும் வேறுபட்டிருக்குமே! அரசியல் நிலையிலே இரண்டு வகையான போக்கு உண்டு. ஒன்று ஆரியச் சார்பான அரசு; இன்னொன்று திரவிடச் சார்பான அரசு. அதே போல, கலைத் துறையிலே இரண்டு வகையான வேறுபாடுகளைப் பார்க்கலாம்! ஒன்று ஆரியச் சார்பான கலைகள்! ஒன்று திராவிடச் சார்பான கலைகள். அதே போல, பண்பாட்டுத் துறையிலே இரண்டு வகையான நிலைகளைப் பார்க்கலாம்! ஒன்று ஆரியச் சார்பான பண்பாடு; மற்றொன்று திரவிடச் சார்பான பண்பாடு. இந்தத் திரவிடம் என்கிற வடசொல் அமைப்பு தான் நம்மை முதலில் வேறுபடுத்தியது. எனவே, நாம் எதனால் வேறுபட்டோம்? அடிப்படையான மூல மொழிப் பற்று இல்லாமல் போனதற்குத், திரவிட இனம் பிரிந்ததும் ஒரு கரணியம்; பல வகையான சமயங்கள் சாதிகள் இந்த இனத்திலே தோன்றியதும் ஒரு கரணியம். இதை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் **தமிழினம் என்று சொல்லுகின்றபொழுது, அது தமிழும், தமிழ் மொழி சார்ந்த இனமும் என்று மொழிச் சார்பாகவும் பொருள் கொள்ளலாம்! இனச் சார்பாகவும் பொருள் கொள்ளலாம்!** எனவே, அவர்களை வேறு பிரித்துக் கூற வேண்டுமானால், தெலுங்கு பேசுகின்றவர்களை நாம் 'தெலுங்குத் தமிழினம்' என்று கூறலாம்! கிளைமொழியாகிய தெலுங்கையும் அதன் மூலமொழியாகிய தமிழையும் இணைத்துத் 'தெலுங்குத் தமிழினம்' அல்லது தெலுங்குத் தமிழர்கள், கன்னடத் தமிழர்கள், மலையாளத் தமிழர்கள் என்று சொல்லலாம்! அதில் ஒன்றும் தவறில்லை! ஏனென்று சொன்னால், இன நிலையிலே பார்த்தால் ஒரே ஓர் இனம்தான் அது! மொழி நிலையிலே அது வேறுபட்டிருக்கிறது. அதற்கு ஓர் எடுத்துக் காட்டிருக்கிறது. அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிக நாம் சிந்திக்க வேண்டியது. நம்முடைய உடன்பிறப்பாளன் ஒருவன் இங்கிலாந்துக்குப் போய்ப் படிக்கிறான். அங்குப் பத்தாண்டுகள் வாழ்ந்து விடுகிறான். அப்படி வாழ்கின்ற பொழுது தமிழையே மறந்து போகின்றான். ஆங்கிலத்தில்தான் பேசுகின்றான். திரும்பி வருகின்ற பொழுது அவனுக்குத் தமிழ் தெரியவில்லை! ஆங்கிலத்திலேயே உரையாடுகின்ற அவனை நாம் தமிழன் என்று சொல்வதா? அல்லது வேறு யாரோ என்று சொல்வதா? தொலைந்து போகட்டும்! வேறு நாடுகளிலே, மொரீசியசு போன்ற தீவுகளிலே, ஆப்ரிக்கா போன்ற சில பகுதிகளிலே இருக்கின்ற தமிழர்கள் அடியோடு தமிழ் தெரியாதவர்களாகப் போய் விட்டார்கள். அவர்கள் தமிழர்கள் என்ற வரலாற்று உண்மையை உணர்கின்ற பொழுது, அவர்களுக்குத் தமிழ் தெரியவில்லை; ஆங்கிலம் அல்லது பிரஞ்சு பேசுகின்றார்கள், என்று கரணியத்துக்காக அவர்களை நாம் தள்ளிவிடுவதா? எண்ணிப் பார்க்க வேண்டும்!

எனவே, மதத்தாலோ, அல்லது இடத்தாலோ, அல்லது வேறு கிளை மொழி வகையினாலோ, மாறுபட்ட இனங்களை, இப்பொழுது நாம் வேறு வேறுபடுத்திக் கொண்டு, இன்னும் நம்முடைய பிரிவு நிலைகளை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டாம்! யார் தமிழ் மொழி என் தாய் மொழி என்று ஒப்புக் கொள்ளுகிறார்களோ, அவர்களையெல்லாம் நம் தமிழின முன்னேற்றக் கழகத்திலே சேர்த்துக் கொள்ளுவதிலே தடையிருக்கக் கூடாது. ஏனென்றால், உண்மையான வரலாற்று அறிவு தெரிந்தவர்கள். தமிழ் தான் மூல மொழி, திரவிட இனத்துக்கு, என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். வரலாற்று அறிவு தெரியாதவர்கள் தாம், இல்லை, வேறு மொழி தான் மூலமொழி என்று சொல்லிக் கொள்வார்கள். **எனவே, கன்னடம் பேசுவதினாலோ, தெலுங்கு பேசுவதினாலோ, அல்லது வேறு திரவிட மொழியைப் பேசுவதினாலோ, அவர்கள் வேறு ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிவிடக் கூடாத ஒரு நிலை நமக்கு வேண்டும். அது**

(8-ஆம் பக்கம் பார்க்க)

தொடர் : 2

தஞ்சை மாவட்டம்

பாலைநிலம் ஆகிவிடுமா ?

சிறிய நீர்த்தேக்கம் போலக் கபினித் திட்டம் பற்றி அவ்வப்போது பேசி வந்த மைசூர் அரசு, காலம் செல்லச் செல்ல, 'கபினித் திட்டத்தை' அளவில் பெரிதாக்கும் செயலில் இறங்கியது. இதனால், மேட்டூர் அணையில் காவிரி நீர் வருவது மிகமிகக் குறைவடையும் என்ற நமது முணு முணுப்பைத் தட்டிக் கழிக்கத் தொடங்கியது. தீராத தலைவலி தமிழகத்தைப் பிடித்துக் கொண்டது.

தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத் துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் கருநாடக அரசிடம் 'கோள்' சொன்னதன் விளைவு இது ! ''தமிழ் நாட்டில் காவிரிக்குக் கட்டுகிற அணையெல்லாம் பெரியனவாய் உள்ளன. தண்ணீரைக் கொட்டிக் கொடுத்து ஏமாறிப் போகிறவர்கள் நீங்களே'' என்று வீண் பழி சொல்லி மூட்டிவிட்டார், அந்த அதிகாரி.

கருநாடக முதல்வராகத் தேவராசு அரசு வந்த பிறகே காவிரித் திட்டப் பேச்சுகள் விறு விறுப்புப் பெற்றன, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மறு ஆய்வு செய்வதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படப் போவதில்லை என்று திடீரென்று சொல்ல ஆரம்பித்தது கருநாடக அரசு.

மீண்டும் உரையாடல் தொடங்கியது. அன்றைய நடுவண் அமைச்சர் கே. எல் இராவ் முன்னிலையில் உரையாடல் நிகழ்ந்தது. ஆனால் கருநாடகம் பிடி கொடுக்கவில்லை.

வேறு வழியின்றி, 1971-இல் தமிழ்நாடு உச்ச வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. வழக்கு முடியும் வரை புதிய அணைகளைக் கட்டுவதற்குக் கருநாடகத்தை தடை செய்யக் கோரியது தமிழ்நாடு. அப்போது, கபினி, ஏமாவதி அணைகளைக் கட்டத் தொடங்கி இருந்தது கருநாடகம். ஆனால் உச்சவழக்கு மன்றம் அப்படி ஒரு தடைவிதிக்க மறுத்துவிட்டது. 1972-இல் இந்திரா காந்தி சென்னை வந்தபோது, 'வழக்கைத் திரும்பப் பெறுங்கள்; மீண்டும் பேச்சு நடத்த ஏற்பாடு செய்கிறேன்; முடிவு காண்பதற்கு உதவுகிறேன்' என்று சொன்னதாகச் சொல்வார்கள். அதனால் வழக்குத் திரும்பப் பெறப்பட்டது.

மீண்டும் உரையாடல் நடத்தினார் கே. எல். ராவ்! ''1924-ஆம் ஆண்டு ஒப்பந்த மறு ஆய்வு அடிப்படையில் நிலையான ஏற்பாட்டுக்கு வழி செய்வோம். 'காவிரிக் குழு' ஒன்று அமைப்போம். பேச்சுகள் முடியும் வரை காவிரித் தண்ணீருக்கு யாரும் புதிய பயன் முறைகள் ஏற்படுத்தக் கூடாது''—என்றார் அவர். தமிழகம், கருநாடகம், கேரளம் ஆகியவற்றின் முதல்வர்கள் மூவரும் இதற்கான கூட்டறிக்கையில் கையொப்பமிட்டனர்.

ஐவர் குழு காவிரிப்படுகையைச் சுற்றிப் பார்த்து நேர்மையான அறிக்கையையே கொடுத்தது. இனிமேல் பங்கு போடக் காவிரி ஆற்றல் 'மிகை நீர்' இல்லை என்பது தான் அந்த அறிக்கையிலிருந்து தெரிய வரும். **1924 - ஆம் ஆண்டு ஒப்பந்ததில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மிகைநீர் இருப்பாகத் தெரிந்தால் பங்கு போடலாம்** என்று அறிக்கையில் இருக்கிறது.

மீண்டும் உரையாடல்! கே. எல் ராவ் தனித்தனியாக மூன்று மாநில அதிகாரிகளையும் கூப்பிட்டுப் பேசினார். கடைசியில் காவிரியில் மிகைநீர் உண்டு பண்ணுவதற்கு இன்னொரு புதிய குழு போடப்பட்டது.

''மிகைநீர் இல்லை என்பது தமிழகத்தின் சான்றடிப்படையிலான, நேர்மை வாய்ந்த கருத்துரை.'' ஆனால், புதிய குழுவோ தண்ணீரைச் சேர்த்து வைத்துப் பத்தாயிரம் கோடிக் கன அடி நீரை மிச்சப்படுத்த முடியும் என்று கணக்குக் கூறியது. காவிரியில் தண்ணீர் குறைவாக வரும் ஆண்டுகள் உண்டு. அப்போது இப்படி மிச்சப்படுத்தத் துளியும் வாய்ப்பு இல்லை. ஆகவே தமிழகம் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குள் நெருக்கடிநிலை வந்தது. கருநாடகம் தண்ணீரை மிச்சப்படுத்திப் பங்கு போடும் திட்டத்தில்—அஃதாவது தண்ணீரைத் தானே அதிகமாக எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் கையொப்பமிடத் தமிழக ஆளுநரை வற்புறுத்தியது. ''தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முடிவு செய்யட்டும்'' என்று கையொப்பமிட மறுத்து விட்டார் அன்றைய ஆளுநர்.

இன்று, கபினி, ஏமாவதி அணைக்கட்டுகளைக் கட்டி முடித்துவிட்ட நிலையில், காவிரியை ஓடவிடாமல் கட்டி வைத்திருக்கிறது கருநாடக அரசு, காவிரியின் நீரோட்டம் ஒரேயடியாகத் தடைபட்டு விட்டது. **காவிரியிலிருந்து பொதுவாக 32,000 கோடிக் கன அடித் தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டிருந்த நாம், இன்று 500 கோடிக் கன அடித் தண்ணீருக்கே கையேந்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.**

சிக்கல் இன்று பேருருவம் எடுத்து விட்டது. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் செத்தே விட்டது என்று கருநாடக அரசு இன்று கூறுகிறது. ''ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஒப்பந்த விதிகளைப் பற்றி மீண்டும் மறு ஆய்வு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, ஒப்பந்தமே செத்து விட்டதாகக் கூறுவது முறையற்றது'' என்பது தமிழகப் பொறியியல் வல்லுநர்களின் வழக்குரை, ஐம்பது ஆண்டுகளுக்குத் தான் ஒப்பந்தம் என்றால், பல கோடி உருபாய் செலவில் மேட்டூர் அணை கட்டப்பட்டிருக்குமா?' பகுத்தறிவு வழிப்பட்ட இந்தக் கேள்விகளுக்குக் கருநாடகம் விடை சொல்ல முடியுமா? 'ஆம்' என்று நெஞ்சழுத்தத்தோடு விடை கூறுமானால், தமிழகம் அன்று ஏமாற்றப்பட்டதா?

நமது இத்தகைய புலம்பல்களைக் கருநாடகம் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை. 'எனக்கே உரியது காவிரி' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறது. உலகச்சட்ட விதிகளுக்கே இது பொருந்தாது. அய்ரோப்பிய நாடுகளில் பொதுவாக ஓடும் ஆறுகள் உண்டு. ஒரு தனி நாடு அதற்கு உரிமை கொண்டாட முடியாது. பாக்கிசுத்தான் - இந்திய உறவில் பஞ்சாபு மாநிலத்தில் ஓடும் ஐந்து ஆறுகளின் பங்கீட்டில்கூட இதுபோல நேர்ந்தது இல்லை.

காவிரிச் சிக்கலில் தமிழகத்தின் 'வளம்' சிக்கியிருக்கிறது. சிக்கலைத் தீர்க்க என்னதான் வழி? தமிழகப் பொதுப் பணித்துறைத் தலைமைப் பொறியாளராக இருந்து, காவிரி நீர்ச் சிக்கலில் பட்டறிவு மிக்கவரான திரு. எசு. பி. நமச்சிவாயம் கூறுகிறார்:

''காவிரிநீர் வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி, ஒரு தன்வினைப்பு அமைப்பாக மாநில அரசுகளின் கட்டுப்பாடுகளின்றி, அஃது இயங்க வேண்டும். அந்த வாரியத்தின் கீழ் தமிழகம், கருநாடகம் ஆகிய இரு மாநிலங்களில் உள்ள நீர்த் தேக்கங்கள் இயங்க வேண்டும். நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரை அனுப்பும் அளவை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அதனிடம் இருக்க வேண்டும். ஆற்றில் வரும் தண்ணீரைப் பொறுத்து எவ்வளவு அதிகமாகப் பாசனம் செய்ய முடியுமோ, அவ்வளவு அதிகமாகப் பாசனம் செய்யச் செய்வதும் அவர்கள் பொறுப்பு. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்று சொல்வார்கள். பத்து ஆண்டுகளுக்கு யார் தலையீடும் இன்றி இந்த வாரியம் செயல்பட்டால் பூசல்கள் மறையும். நிலைமை ஒரு கட்டுக்குள் வரும்.

இப்படி ஒரு வாரியம் அமைப்பது முடியாத செயல் அன்று. அமெரிக்காவில் 'டென்னசி'ப் பள்ளத்தாக்கு வாரியத்தை முன்னெடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். நமது நாட்டிலேயே, தாமோதர ஆற்றுப் பள்ளத்தாக்கு வாரியத்தை முன்னெடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். நமது நாட்டிலேயே, தாமோதர ஆற்றுப் பள்ளத்தாக்கு வாரியம் இருக்கிறது. மாபெரும் தலைவராகத் திகழ்ந்த அன்றைய தலைமையமைச்சர் நேரு, பீகாரையும் வங்காளத்தையும் இழுத்து உட்கார வைத்துத் தாமோதர ஆற்றுப் பள்ளத்தாக்கு வாரியத்தை அமைக்கவில்லையா? அரசியல் சட்டத்தில் பாசனம் மாநிலப் பொறுப்பாக இருக்கிறது என்பதால், நடுவண் அரசு தட்டிக் கழிக்கத் தேவையில்லை. அரசியல் சட்டத்தில் எத்தனையோ திருத்தங்கள் செய்கிறோம். உயிர்ச் சிக்கலான ஒரு புலனத்தில் திருத்தம் செய்து வழி காண முடியாதா?''

பட்டறிவு மிக்கவர் கவலையோடுதான் பேசினார். வளமார் தஞ்சைத் தரணியின் எதிர்காலத்தை நினைத்தால் பற்றி எரிகிறதே!

நமக்கு ஒன்று தெரிகிறது. தலைமையமைச்சர் மனம் வைத்தால் இஃது இயலாத செயலா?

- ஆர். செ.

• குறிப்பு ; 1924-ஆம் ஆண்டில் காவிரி ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு எல்லிசு என்ற பொறியாளர் அணை கட்டும் வேலைகளை 1925 - ஆம் ஆண்டில் தொடங்கினார். அணை கட்ட முதலில், ஊராட்சிக் கோட்டை, நெருஞ்சிப் பேட்டை, நவப்பட்டி, சாம்பள்ளி என்ற நான்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டது. மேட்டூர் அணை கட்டி முடிக்க ஆன செலவு ஏழு கோடியே முப்பத்தேழு இலக்கம் உருபாய். சென்னை ஆளுநராக இருந்த வயவர் சியார்ச்சு பிரடெரிக் சிரான்லி திறந்துவைத்ததால் 'சிரான்லி அணை' என்ற பெயர் வந்தது.

மேட்டூர் சிரான்லி அணை 5930 அடிநீளம் உள்ளது அணையின் மொத்த உயரம் அடிமட்டத்திலிருந்து 214 அடி நீர்த்தேக்கத்தில் 124 அடி தண்ணீர் தேக்கி வைக்கலாம். அணையின் மொத்தக் கொள்ளளவு 9350 கோடிக்கன அடி. இதன் பரப்பளவு அறுபது சதுரக் கற்கள் ஆகும்.

மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு, இப்போது 14-ஆவது தடவையாக நீர்மட்டம் குறைந்திருக்கிறது.

—அடிப்படை: ஆனந்தவிகடன் (21—11 '82)

தமிழ்ப்படுத்தம்—இரணியன், கோவை.

தமிழ்மொழி உணர்ச்சிதான் தமிழினத்தை ஒன்று சேர்க்கும் !

கல்லக்குறிச்சி [illegible]

கல்லக்குறிச்சியில் [illegible] 28-11-82 அன்று கல்லக்குறிச்சி வட்டத் தமிழாசிரியர் கழகம் நடத்திய பாராட்டுச் சிறப்பு விழாவில் திரு. மன்னர் மன்னன் (பாவேந்தர் மகன்) கலந்துகொண்டு பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'தமிழர்களாகிய நாம் அண்டவந்தவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டுத் தூங்கிவிட்டோம். கொசுக் கடித்தது போன்ற உணர்வினால் சிறிதுகாலத்திற்கு முன்பு சிறிதே விழித்தோம். ஆனால் மீண்டும் தூங்கிவிட்டோம். தூங்கிவிட்ட நம்மை எழுப்ப வேண்டுமானால் அது சாட்டையடியினால் மட்டும் தான் முடியும்'

தமிழ்மொழி உணர்வு தேசியத்திற்கு எதிரானது என எண்ணப்படுகின்றது. அந்தந்த மாநில மொழி வளர்ச்சிக்கு ஆதரவு கொடுத்தால்தானே ஒன்றுபட்ட ஒற்றுமை, உணர்வு, தேசிய மனப்பாங்கு ஏற்படும். மொழி உணர்வு ஒன்றுதான் தமிழினத்தை ஒன்று சேர்க்கும் ஆற்றல் பெற்றது. தமிழ் உணர்ச்சி வந்துவிட்டது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எந்த இதழ்கள் இன்று தமிழில் வருகின்றன? தமிழ் உணர்ச்சிக்கு எங்கெங்கெல்லாம் இன்று சரிவு தர முடியுமோ அங்கங்கெல்லாம் செய்தி இதழ்கள் அதனை உண்டாக்குகின்றன,

புதுப்பாடல் (கவிதை) எழுதுபவர்கள், 'உணர்ச்சியின் வெளிப்பாடு' தானே பாடல் என்பது; அவற்றிற்கு இலக்கண வரம்புகள் தேவையில்லை என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் சொல்வது சரிதான. எனக்கும் உணர்ச்சி வருகின்றது. அதுவும் ஆங்கிலத்தில் வருகின்றது. நான் சொல்கின்றேன்.

''I Comed here''

(I Came here என்பதற்குப் பகரமாக) என்றால், இதனை எந்த ஆங்கில இதழ்களாவது வெளியிடுமா? ஐயகோ ஆங்கிலத்தை இழிவுபடுத்துகிறார்களே, கொலை செய்கின்றார்களே என விரிந்து கட்டிக் கொண்டுவரமாட்டார்களா?

யாரோ சிலருடைய பிழைப்பு கெட்டுப் போகும் என்பதால்தான் அறமன்றங்கள் தமிழில் நடைபெறவில்லை. எவரும் புரிந்து கொள்ளும் மொழியில் நடைமுறை இருந்துவிட்டால் அவர்களுக்குப் புரியாத மொழியில் தில்லுமுல்லு செய்ய முடியாது. கோயில்களில் தமிழில் வழிபாடு செய்தால் நமக்கும் இறைவனுக்கும் இடையில் இருப்பவர்களின் வாழ்வு போய்விடும் என்கின்ற நிலையில்தான் அவர்கள் அதனை எதிர்க்கின்றார்கள். இப்படி ஒரு சிலருடைய வாழ்வினைக் காத்துக்கொள்ள பலருடைய வாழ்வினைப் பாழ்படுத்துகின்றார்கள்.

மாணவர்களோடு பழகும் வாய்ப்பு அதிகம் உள்ள தமிழாசிரியர்கள் தாம் மாணவர்களுக்குத் தமிழ்உணர்வினை ஊட்டுதல் வேண்டும்.

இவ்வாறு தமிழ் மொழி உணர்வும் தமிழின உணர்வும்மேலோங்கிட பாவேந்தர் மகன் திரு. மன்னர் மன்னன் சிறப்புரை ஆற்றினார்.

தொடர் :8

பிரித்தானியத் தளபதி ரூசுவாட் திருகோணமலையைக் கைப்பற்றியதால் கிழக்கிந்திய வாணிக்கழகத்தினர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். ஈழத்தீவு முழுவதையுமே— தாங்கள் கைப்பற்றித் தீவின் செல்வத்தைச் சூறையாடத் திட்டம் தீட்டினார்கள். தீவில் உள்ள ஏனைய கோட்டைகளைக் கைப்பற்றுவதற்குக் கிழக்கிந்திய வாணிகக் கழகத்தினர் 'கேணல் ரூசுவாட்'க்குப் பொருளுதவி செய்து ஊக்கமளித்தனர். இதன் அடிப்படையில் 'மேயர் பிறேசர்' தலைமையில் படைகள் அனுப்பப்பட்டன. அப்படை 17-9-1795:இல் மட்டக்கடப்பையும், 27-9-1795-இல் பருத்தித் துறைக் கோட்டையையும், 28-9-1795இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றியது. யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி ஆட்சியைப் பிடிப்பதற்குப் பிரித்தானியத்தளபதி ரூசவாட் எடுத்த முயற்சி பண்டாரவன்னியனால் தோற்கடிக்கப் பெற்றது. எனவே மன்னாரைப் பிடிப்பதற்குக் கேணல் பாபட் தலைமையில் அனுப்பப்பட்ட படையினர் 6-10-1795-இல் மன்னாரைக் கைப்பற்றினர் 1795 ஆம் ஆண்டு முடிவுக்குள் 'வன்னி' ஆட்சி தவிர்ந்த தமிழீழப் பகுதி முழுமையாகப் பிரித்தானியரின் மேலாண்மைக்குட்படுத்தப்பட்டது.

கொழும்புக் கோட்டையைக் கூலிப்படையின் உதவியுடன் கைப்பற்றினர்.

தமிழீழப் பகுதியைக் கைப் பற்றிய பிரித்தானியர், ஈழத்தின் மேற்குப் பகுதியில் இருந்த கொழும்புக் கோட்டையைக் கைப்பற்ற சுவிட்சர்லாந்தின் (SWITZERLAND) கூலிப்படைகளை நாடினர். சுவிட்சர்லாந்து வாசியான 'கவுண்ட் சாள்சு டானியல் டி மோறன்' என்பவர் கூலிப் படைகளை வைத்திருந்தார். அக்கூலிப் படைகளில் ஒரு பகுதியினர் கேணல் பியறிபிரெட்றிக் டி மோறன் தலைமையில் 1786-ஆம் ஆண்டு முதல் ஒல்லாந்தருக்குதவியாகக் கொழும்பில் இருந்தனர். 'இசு கொட்லாந்தைச் சேர்ந்த (SCOTLAND) பேராசிரியர் கிளேகோன் ஐரோப்பாவில் கூலிப்படைகளின் தலைவர் டானியல் மோறனைச் சந்தித்துப் பண உதவிகள் செய்து, ஒல்லாந்தரினால் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையையும் கொடுத்ததின் மூலம் கொழும்பில் ஒல்லாந்தருக்காதரவாகவிருந்தகூலிப்படையினரைப் பிரித்தானியருக்காதரவாக மாற்றினர். 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தனி மாந்தர்கள் பொருளீட்டக் கூலிப்படைகளை வைத்திருந்தனர். இன்று நாட்டினங்களின் உரிமைப் போரையும், விடுதலையையும் நசுக்கித் தமது வல்லாண்மையை நிலைநாட்ட வல்லரசுகளினால் கூலிப்படை அனுப்பப்படுகின்றது. பலம் குறைந்த நாடுகளைப் பலம் கூடிய நாடுகள் எப்படிக் கௌவிக் கொள்கின்றன என்பதனை வியட்னம், குவாத்தமாலா (GUATEMALA) அங்கோலா (ANGOLA) நிக்கரகுவா (NICARAGUA) ஆகிய நாடுகளில் அமெரிக்கக் கூலிப் படையின் நசுக்கலும், தென் ஆப்பிரிக்கா, பாக்லாந் (FALKLAND) ஆகிய நாடுகளில் பிரித்தானிய வல்லாளுமையும் போலாந்து (POLAND) ஆப்கானிசுத்தான் (AEGHANISTAN) போன்ற நாடுகளில் சோவியத் படைகளின் நிலையான ஊடுருவல்களின் மூலமாகவும் காணலாம்.

இவை எல்லாம் குடியாட்சி (DEMOCRACY) சமூகவுடைமையாட்சி (SOCIALISM) என்ற போர்வையில், 20ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் மாந்தன் அறிவியலில் வளர்ச்சி பெற்றுவிட்ட இக்கால கட்டத்தில் இட்லரின் நாட்டினவுடமையை (NAZISM) எதிர்த்த நாடுகளினால் உதவி என்ற போர்வையில் நடாத்தப்படும் சூறையாடலாகும்.

டானியல் டி மோறனின் கூலிப்படை மாற்றத்தைத் தொடர்ந்து ஆங்கிலப் படைத் தளபதி ரூசுவால்ட் கண்டி அரசனுடன் போர்த் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மேற் கொண்டிருந்தான். போர்த் தவிர்ப்பு ஒப்பந்தமும், கிளேகோன் செய்த தந்திரச் செயலான படை மாற்றமும், ஆங்கிலேயர்-ஒல்லாந்தரின் கொழும்புக் கோட்டையைத்தாக்க வாய்ப்பாக அமைந்தன. ஒல்லாந்தர் எதிர்பார்த்த பிரெஞ்சுப் படைகளின் உதவி கிடைக்கவில்லை. அத்துடன் இந்தியாவில் திப்புசுல்தானின் படை ஆங்கிலேயரை இடைமறித்துப் போராடுவார்கள் என எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தனர். எனவே ஆங்கிலேயர் 16—02—1796 காலை கொழும்புக் கோட்டையை ஒல்லாந்தரிடமிருந்தும் கைப்பற்றினர். கொழும்புக் கோட்டைக்குள் ஆங்கிலேயர் புகுந்ததனால் மாத்தறை, காலி, கழுத்துறை ஆகிய கோட்டைகளும், தீவின் கரையோரப்பகுதிகள் முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. தீவின் ஆட்சியை ஆங்கிலேயப்பாராளு மன்ற அமைச்சர்கள் நடாத்துவதா, அல்லது வணிகக் கழகத்தினர் நடாத்துவதா, என்ற சிக்கல் எழவே ஈழம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுச் சென்னை ஆளுநர் கோபேட்டின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. சென்னை ஆளுநர் வாணிகக் கழகத்தின் பரிந்துரையின் பெயரில் 'ரூபேட் அன்ருசு' அவர்களை 27 10—1795இல் ஈழ அரசு அதிகாரியாக அமர்த்தினர். வாணிகக் கழகத்தினர் பொருள் ஈட்டுவதையே நோக்கமாகக்கொண்டு, குடிமக்களிடம் உணவுச் செய்கை, புகையிலை, வேட்டையாடுதல், தென்னை, பனை, இலுப்பை, ஆகியவற்றுக்கு வரியைத் திணித்தனர். அதற்கும் மேலாக மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், மதுக் குடிப்பு வடித்தல் ஆகிய வேலைகளைத் தங்கள் மேற்பார்வையிலேயே குத்தகைக்குவிட்டுப் பொருள் தேடத் தொடங்கினார்கள். இவ்வரித் திணிப்பை எதிர்த்துத் தன்னாட்சி நடத்திய பண்டார வன்னியன் 1797இல் அயல் ஊர்களில் கலகங்களை உருவாக்கி வரிதிரட்டிய வெள்ளைக்காரத் 'தலையாரி' (HEADMAN)யை வெட்டிக் கொன்றான். இதைத் தொடர்ந்து கண்டி அரசனும், பிரெஞ்சுக்காரர்களும், ஆங்காங்கே கலகங்களை ஏற்படுத்தினர். கலகங்களைத் தணிப்பதற்குப் பிரித்தானியர் இரட்டை ஆட்சி முறையை நடைமுறைப்படுத்தினார்கள்.

1. வருமானம், வாணிகம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பாக வாணிகக் கழகமும்,
2. அரசியல், அறத்துறை, பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பாக அரசு ஆளுநர் பொறுப்பில் இருக்கவும் வழி சமைக்கப்பட்டது.

ஆளுநரும், வணிகக் கழகமும், பிரித்தானியக் குடியேற்ற அமைச்சரின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனால் மூன்றும் 'யோர்ச்' மன்னன் ஈழத்தின் கரையோரப் பகுதிகட்கு அரசனானான்.

ஈழத்தின் முடிசார் குடியேற்ற முதல் மாநில ஆட்சி ஆளுனர்.

ஈழத்தின் முதல் மாநில ஆட்சி ஆளுநராகப்(GOVERNOR) பிரித்தானியாவின் முன்னால் தலைமையமைச்சரின் மகனான பன்மொழிப் புலமை பெற்ற பிரட்றிக்நோத் (FREDERIC NORTH) 26-3-1798இல் அமர்த்தப்பட்டார். இவர் இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினராகத் தமது 24-ஆம் அகவையில் தெரிவு செய்யப்பட்டவர்.

கொழும்பில் இருந்த 'பிரகேடிய யெனரல் பியரி பிரெட்ரிக் டி மோறன்' அவர்கள் முன்னிலையில் 12-10-1798 இல் ஆட்சி ஆளுநராக 'நோத்' நம்பிக்கை ஒப்புதல் செய்து கொண்டார். 'நோத்துக்'குத் துணையாக 'கிளேகோண்' என்பவர் அரசுச் செயலாளராக அமர்த்தப்பட்டார், இவரே ஈழத்தின் முதல் செய்லாளருவார். (தொடரும்...)

'முகுந்தன்'
(உமாமகேசுவரன்)
தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

மதத்தைக் காக்கவந்த மடங்கள்

தமிழ்ச்சுடர் மணிமுத்து, பழனி
மதுரை (வ) மாவட்டச் செயலர், உ.த.மு.க.)
செய்தி தந்தவர் : ஓடவை. தமிழ்வேந்தன்

இந்நாள்வரை மத வெறியால் மக்களைப் பிரித்துச் சூறையாட அரசியலாளர்கள் மட்டும் தான் இருந்தனர். இப்போது மதுரை மடமும் கூடப் பயிருக்கிறது. இந்தப் புதிய வீக்கம் (வளர்ச்சி அன்று) தமிழினத்தை எப்பாடு படுத்துமோ? அறிகிலோம். இன்னும் பல மண்டைக் காடுகளை அரங்கேற்றத் துடிக்கிருர்கள். விழித்துக் கொண்ட தமிழினத்தை மதச்சேற்றில் ஆழப் புதைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிருர்கள். 'தமிழ் வழிபாட்டுக்கு உகந்த மொழியன்று' என்று தமிழ்தாய்க்குப் பிறந்தவர்கள் (தமிழகத்தில் தன்னுடைய தாய்க்கே இவர்கள் பிறந்தவர்கள்!) பறையறையக் கிளம்பி விட்டார்கள்!

இந்தத் தோழர்களின் மடமையைப் பார்த்துக் கொண்டு, பகுத்தறிவுப் பாசறையில் பிறந்து, வளர்ந்து முன்னேறிய கழகங்களும் எதிரடி தராமல் இருப்பது வருந்தற்குரியதே. ஒன்ருய் இணைந்த உலகத் தமிழினக் கழகத் தோழர்கள் முன் எழவேண்டும். வரலாறு மீண்டும் தந்தை பெரியாருக்குப் பிறகு ஒரு திருப்புமுனையைக் காணத் துடிக்கிறது. அந்தத் திருப்பத்தை ஏற்படுத்த வேண்டுமெனின் கைமாறு கருதாமல் மொழி, இனம், நாடு, கலை, அறிவியல் பண்பாடு குமுக வளர்ச்சிக்காக அமைந்த உ.த.மு.க. தான் முன் வரவேண்டும்.

கடந்த கிழமை பழனி வட்டம், ஒட்டன் சத்திரத்தில் அருளாட்சிக் கழகப் பொதுக் கூட்டம் நடந்தது. 'தமிழ்ப் படித்தவன் மடமைக்குத் தலைவணங்கான்' என்பதைப் பொய்ப்பிப்பது போன்று பல தமிழாசிரியர்கள் மதுரை மடத்திடம் கைகட்டி நின்றது காண ஒண்ணாச்(கூடா) காட்சியாம்!

ஒட்டன் சத்திரத்தில் 'தமிழ்க் கோயில்' கட்டித் தமிழ்த் தாய்க்குப் படிமம் அமைத்துப் பெருமை பெற்ற திரு. முருகேசப் பாவலர் (முருகேசக் கவிராயர்), 'இனி மேல் அரசு அலுவலகங்களில் ஊழியர்கள் திருநீறு அணிந்து கொண்டு வரும்படி கட்டாயப்படுத்த வேண்டும்' என்ற புதிய சட்டத்தைக் கொண்டு வந்தார்.

திரு. பாரதிபன் என்பவர் 'எத்தனையோ மடாதிபதிகள் இருந்தாலும் இந்து மதத்தைக் காக்க வேண்டும் என்று வெளிக் கிளம்பி வந்த ஒரே ஆண்மகன் மதுரை ஆதீனமே' என்று கூறி மதுரை ஆதீனம் ஆண்மகன் என்பதை உறுதிப்படுத்தினர். "வீரமணியின் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். மதம் காக்க வீட்டுக்கொரு பிள்ளையைப் பெற்றுக் கொடுங்கள்" என்று கெஞ்சியது இவர்களுடைய வெறியின் உச்சக்கட்டம். 'தற்காப்புக்குச் சிலம்புப் பயிற்சியிலும் இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்ற இவர், தமிழ் மக்களைத் தாக்கவே தனிப் படை திரட்டப் போகிருரோ என்னவோ!

மதுரை ஆதினம் பேசும் போது, "பாடப் புத்தகங்களில் மதப் பரப்புதல் செய்ய வேண்டும் — இந்து மதத்தை அரசு மதமாக ஆக்க வேண்டும் — கோயில் சமசுக்கிருதமே வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டும். தேவாரம், திருவாசகமெல்லாம் கோவிலுக்கு வெளியே பட்டிமன்றத்துக்கும், இன்னிசைச் சொற்பொழிவுக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் — நான் இறந்தாலும் தாழ்வில்லை, மதப்பணி நின்றுவிடக் கூடாது" என்றெல்லாம் குறிப்பிட்டதை நோக்குங்கால், இவர்கள் எத்துணை வெறிகொண்டு அலைகிருர்கள் என்பது புலனாகும்.

இத்தமிழ்ப் பகைஞர்களை வளரவிடுவது நாட்டுக்கும் மொழிக்கும், இனத்துக்கும் நன்றன்று. இவர்களால் பெருகும் மருளாட்சி இன்னும் பல 'ஞானரத'ச் சண்டைகளைத் தாம் பெருக்கும். முடிந்தால் இவர்கள் மதத்தைப் பரப்பட்டும். ஆயின் அதை அரசாணையாகவே மாற்றத் துடிப்பதுவும் தமிழையே புறக்கணிக்கச் சொல்வதுவும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கன — ஒறுக்கத் தக்கன.

மருளில் மக்களை ஆழ்த்தத் துடிக்கும் இந்த மடங்கள், சிலம்பம் எடுத்து மல்லுக்கும் அணியமாக இருக்கிருர்கள். இந்த மாயத் திரையைக் கிழிக்க இன்றே நாம் எழ வேண்டும். நம் எழுத்து, சொல், செயல் மூன்றும் இணைந்து வினையாற்ற — முனைந்து வினையைத் தொடங்க வேண்டிய காலம் இது; சுணங்காமல் புறப்படுக தோழர்களே; பட்டி தொட்டியெல்லாம் உ.த.மு.க. கொள்கைளைப் பரப்பினால் போதும்; மாற்றம் தானாக நிகழும்.

இருவேறு எதிரான மடல்கள்!

பாவலரேறு ஐயா பாதை மாறவேண்டாம்!

மடல்: 1

ஐயா,

சாதி அடிப்படையிலான சலுகைகளின் விளைவுகள் தமிழினத்தைப் பின் தங்கச் செய்துவிடும் என்று அறிக்கை வெளியிட்டுள்ளீர்கள். பார்ப்பனர்களும், பார்ப்பனரல்லாத முற்பட்டோரும் கூட்டாகச் செய்யும் 'சமூகச் சண்டித்தனத்தை' கண்டிக்க முன்வராமல், அதற்கு அஞ்சிப்போய், தாங்கள் அறிக்கை விடுத்துள்ளது வருந்துவதற்கு உரியதாகும்

இன்றைக்குப் பார்ப்பனர்களோடு கூட்டு சேர்ந்து, இடஒதுக்கீட்டிற்கு எதிராகப் புறப்பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத முற்பட்ட சாதியார் 1928-ஆம் ஆண்டு நயன்மை (நீதி)க்கட்சி ஆட்சியினரால் அறிவிக்கப்பட்ட முத்தையா (முதலியார்) திட்டத்தின் மூலம் 44% (விழுக்காடுகள்) பெற்றார்கள். அப்போது பார்ப்பனர்களோடு போட்டியிட்டு வெற்றி பெறத் தகுதி படைத்த தமிழர்கள் இவர்களே- எனக் கருதிப் பிற தமிழர்களான பிற்படுத்தப் பட்டோர்களும், தாழ்த்தப் பட்டோர்களும் மக்கள் தொகை விழுக்காட்டில் 75% (விழுக்காடு) மேல் இருப்பினும் தலைக்கு 14% (விழுக்காடு) முறையை ஏற்றுக் கொண்டார்கள். 1928இல் இடஒதுக்கீடு முற்பட்ட சாதியினருக்குக் கசக்கவில்லை. ஏனெனில் அப்போது அவர்களுக்குத் தானே முதல் விருந்து. பார்ப்பனர்களை வென்று, நமக்குப் பாதை அமைத்துத்தருவார்கள் இந்த முற்பட்டோர் என எண்ணிய பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் இன்றைக்கு ஏமாறி நிற்கிறார்கள். அதோடு மட்டுமன்று; கொடுத்த ஏணியில் ஏறியவர்கள் எதிரிகளோடு கூடிக் கொண்டு இடஒதுக்கீடு கூடாது என ஓலமிடுகிறார்கள். இந்தச் சூழ்ச்சிக் குரலுக்குத் தாங்களும் இரக்கம் காட்டுகிறீர்கள். வருத்தமாக இருக்கிறது.

எல்லாத் துறைகளிலும் எல்லாச் சாதியினரும் ஓரளவாவது இடம்பெறும் வரை இடஒதுக்கீடு தேவையானதே. இது தமிழினத்தைப் பிளவுபடுத்துகிறது என்பதெல்லாம் பார்ப்பனர்களின் தூண்டுகோலும், முற்பட்டோரின் முணுமுணுப்பின் விளைவுமே தவிர இதில் நயன்மை இருப்பதாகக் கணக்கிட முடியாது.

இடஒதுக்கீடு என்னும் குமுகாயச் சம பங்குக்கான முறையைக் கைவிடுவோமேயானால், துளிர்விட்டுக் கொண்டிருக்கிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமன்று, செடியாக வளர்ந்துள்ள முற்பட்டோரையும், உறுதியாகப் படர்ந்து அழிக்கும். கொடியாக இருக்கும் பார்ப்பனர்கள் அழித்து விடுவார்கள். பிறகு முழு தமிழினத்தையே அழித்துவிடும் பெரிய கொடுமை ஏற்பட்டு விடும். பார்ப்பனர்கள் எதிர்பார்ப்பதும் இது போன்ற நிலையையே என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

உண்மையுள்ள

துப்பாக்கி நி. அன்பழகன்

திருச்சி—620016.

●

மடல் : 2

பாவலரேறு ஐயா அவர்கட்கு! அன்பும் பணிவும் நிறைந்த வணக்கங்கள்.

சாதி உணர்வால் வரும் தீமைசள் பற்றித் தாங்கள் தமிழ்நிலம் இதழ்4-இல்வெளியிட்ட அறிக்கை கண்டேன். சாதி உணர்வுகளை வளர்த்து வரும் சிறறன மககளை இடித்துரைக்கும் அவ்வறிக்கை இக்காலத் தேவைகளுள் ஒன்று மட்டுமன்று இன்றியமையாத ஒன்றும் ஆகும்.

சாதி உணர்வற்றோரும் அரசுச் சலுகைகளைப் பெற்றிடச் சாதிப் பெயரைக் குறிப்பிட வேண்டிய — இக்கட்டான நிலை — கட்டாய நிலை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் வலியுறுத்தப் பெற்று வருவது இரங்கத்தக்க ஒன்றாகும்.

இந்த இழிநிலையை நானும் எதிர்நோக்க வேண்டி வந்தது. கடந்த கல்வியாண்டுத் தொடக்கத்தில் என் மகனைப் பள்ளியில் சேர்க்கப் படிவம் நிரப்பித் தந்த போது, சேர்க்கைப் படிவத்தில் சாதிப் பெயர் குறிப்பிடப்படாமல் ''இல்லை'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது எனக் கூறி என் மகனைப் பள்ளியில் சேர்க்க மறுத்து விட்டார், அப்பள்ளியின் தலைமையாசிரியர். நான் எவ்வளவோ, எடுத்துக் கூறியும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

மேலதிகாரிகளிடம் எடுத்துக் கூறியும் பயனில்லை. எனவே நம் 'தமிழ்ச்சிட்டு' பழைய இதழொன்றில் வந்த அரசாணையை எடுத்துக் காட்டி, இனியும் சாதிப் பெயரை குறிப்பிடும்படி வற்புறுத்தினால் முதலமைச்சர்க்குத் தொலைவரி கொடுப்பேன் என்று மிரட்டிய பின் தான் பள்ளியில் இடம் கிடைத்தது. அரசுத் தொடக்கப் பள்ளியிலேயே இந்த 'இழி சாதி' நிலையெனின் யாரை நோவது!

பள்ளியில் சேர்த்துக் கொண்ட பின் 'புள்ளி விளக்கம்' அரசுக்குத் தர வேண்டும் 'சாதியை' அதற்காகிலும் கூறுங்கள் அரசு முன் வந்து தருகின்ற அத்தனைச் சலுகைகளையும் இழந்துவிடுவீர்கள். இங்கே இருக்கின்ற ஏதாகிலும் ஒரு சாதியில்தானே நீங்கள் பிறந்திருக்க வேண்டும். அதைக் கூறத் தயக்கம் ஏன்? பையனுக்கு வள்ளுவன் எனப் பெயரிட்டுள்ளீர்களே நீங்கள் வள்ளுவச்சாதியா?என்று இவ்வாறெல்லாம் வாய் கூசாது கேட்டார், அத்தலைமை ஆசிரியர். அவரை நோவதா? அரசை நோவதா?

அய்யா அவர்கட்கு ஒரு வேண்டுகோள். தமிழ்ச் சிட்டில் வந்த அரசாணையை மீண்டும் தமிழ்நிலத்தில் வெளியிட்டு நலம் புரிய அன்புடன் வேண்டுகின்றேன்.

தங்கள் நலம் நாடும்,

மு. குமரிச் செல்வன்

மணவாளக்குறிச்சி.

''அண்ணா!''

''என்ன தம்பி?''

''தேவாரம் பாடிய மூவர் என்பவர்கள் யார் அண்ணா?''

''சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர்''.

''இம்மூவரில் யார் அண்ணா நீண்டகாலம் வாழ்ந்தவர்?''

''திருநாவுக்கரசர்தாம்! 80 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஆவர்.''

''சம்பந்தர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தவர்?''

''பதினாறு ஆண்டுகளே!''

''அவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை?''

''16,000 என்று சொல்லப்படுகிறது.''

''அவற்றில் இன்று கிடைத்திருப்பவை?''

''384 பாடல்கள்!''

''திருநாவுக்கரசர் பாடல்கள் எவ்வளவு அண்ணா?''

''49,000—என்று சொல்லப்படுகிறது!''

''அவற்றில் இன்று கிடைத்திருப்பவை?''

''311—பாடல்கள்!''.

''இது என்ன அண்ணா கொடுமை? சம்பந்தர் பாடல்களில் மறைந்தவை 15,616 தாம் ஆனால் திருநாவுக்கரசர் பாடல்களில் மறைந்தவையோ 48,689! இதற்கு என்ன அண்ணா கரணியமாக இருக்கும்?''

''நீயே சொல் தம்பி!''

''சம்பந்தர் 'வேதியர்' குலத்தில் பிறந்தவர்; திருநாவுக்கரசரோ வேளாளர் மரபில் வந்தவர் என்பது தானே அண்ணா?''

''எனக்குத் தெரியாது தம்பி!''

-தமிழவேள்

வெளிவந்து விட்டது!

அழகும், பயனும் மிக்கது

தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் வெளியீடு!

0 மிகச்சிறந்த முறையில், அழகிய நடைமுறை எண்களும், அவற்றுடன் தமிழ் மூல எண்களும், ஆங்கில மாதப் பக்கல்களும் கொடுக்கப்பெற்று, உலக, தமிழக அறிஞர்களின் பிறந்த நாள் மறைந்த நாள் விளக்கங்களுடன், பக்கத்திற்குப் பக்கத்திற்குப் பக்கம் ஏராளமான கருத்துரைகள் கொள்கை விளக்கப் பாடல்களுடன், பளிச்சிடும் அழகிய இருவண்ணத்தில், உயர்ந்த வெள்ளைத்தாளில், படஅச்சு (Off-set) முறையில், உருவாக்கப்பெற்ற **தமிழ் நாளிகை** விற்பனைக்கு அணியமாகி விட்டது

0 வேண்டுதல் மடல்களும் பதிவுகளும் நாள்தோறும் வருகின்றன. எனவே தேவையானவர்கள் உடனே தேவையான நாள் காட்டிகளுக்குரிய **முழுப்பணத்தையும்** முன்னதாக விடுத்துவிடவும.

0 **முழுத்தொகையும் முன்பணமாக வராத எவர்க்கும் நாளிகை அனுப்பப் பெற இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.**

() மிகுந்த பொருள் முதலீட்டில், பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையில், தமிழநாளிகை, புதுமுறையில் வருவதால், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் எங்களுடன் இந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

தனி நாளிகை ஒன்று உயர்ந்த வெளியீடு:	4-25
தனி நாளிகை ஒன்று பொது வெளியீடு:	4-00
பதிவில்லா அஞ்சல் கட்டணம்:	1-50
குறிப்பஞ்சல் கட்டணம்:	2-50

0 (குறிப்பஞ்சலிலன்றிப் பொதுவஞ்சலில் விடுத்துத் தவறிப்போனால் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது)

0 ஒரேதடவையில் 25 நாளிகைகளுக்கு மேல் தருவிப்போர்க்குப் குறிப்பு அஞ்சல் செலவு இலவயம்.

0 விரைந்து வாங்கத் தவறுவோர் பின்னர் வருந்த வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.

0 **100** நாளிகை வாங்கி விற்போருக்கு 10விழுக்காடு கழிவு கொடுக்கப்பெறும், அனுப்புச் செலவும் இலவயம்.

0 வெளிநாட்டினர் நாளிகை ஒன்றுக்குக் கட்டுச் செலவு 2 உருபாவும், சப்பல் வழி விடுக்கும் அஞ்சல் செலவுக்கு உருபா 9 என்றும் நாளிகை ஒன்றின் விலையுடன் கூட்டி. அதற்குரிய தொகைக்கு. **பிரிட்டிசு அஞ்சற் கட்டளை (British Postal - Order)** ஆக வாங்கி விடுக்கவும். கூடுதலான படிகளுக்கும் வானூர்தி வழி விடுக்கவும் எழுதிக் கேட்க.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

5, அருணசலத் தெரு, திருவல்லிக்கேணி. சென்னை-5

அன்புள்ளத்தின் ஓர் ஆர்வமடல்!

அன்புநிறை

தென்மொழி ஐயா,

வணக்கம்.

'தமிழ்நிலம்' கண்டு மிகவும் மகிழ்கிறேன். என் வாழ்நாள் முழுதும் 'தமிழ் நிலம்' வளர உழைப்பேன். ஐயா யான் வாழும் நாட்களையும் தாங்கள் சேர்த்து வாழ்ந்தாலும் இனிதே மகிழ்வேன். தங்கட்கு உடல் நலம் இல்லையென அறிந்ததும் மிகவும் துன்புற்றேன். உடல் நலனை நன்கு பார்த்துக் கொள்ள வேண்டுகிறேன். தங்கட்குச் சுமை அதிகம் என்பதனையும் உணர்வேன். இருப்பினும் என்போன்ற இளைய உள்ளங்கள் உணர்வதில்லை. தமிழ் நாட்டில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் மட்டும் வாங்கினால்கூட ஆயிரக்கான 'தமிழ் நிலம்' வெளிவரும். ஆனால், அவ்வாறில்லை.

'தமிழனே- தமிழனைத் தாக்குகிறான் — தாழ்த்துகிறான்' எனும் தங்களுரை முற்றிலும் முதிர்ந்தது—முக்காலமும் உணர்த்துவது. என்னுள்ளத்தில் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. தமிழன் என்றுமே தன்னையும் மொழியையும் மீட்டுக் கொள்ளவோ உயர்த்திக் கொள்ளவோ மாட்டான் என்பது உறுதி! ஏனெனின் 'கும்பகர்ணன்', 'எட்டப்பன்', 'பிரகலாதன்' கதை நமக்குத்தானே! இது தொடர் நிகழ்ச்சியாம். வேற்று நாட்டவர் வந்து நம்மை — நம்மொழியை உயர்த்தினாலொழிய வழி இல்லை. தமிழனுக்குத் தன்னறிவும் இல்லை. கேள்வியறிவும் இல்லை. தமிழன் என்று தான் விழிப்பானோ?

O

—புலவர். மு. ஆறுமுகம், க. மு.

உலகத் தமிழ் அமைப்புகளின் கடமை

— கோ. மு. பெருமாள் —

இன்று உலகிடைப் பரந்து வாழும் தமிழினத்தவரிடைத் தன்மானத்துடனும், அஞ்சாமையுடனும் அவையனைத்தையும் விட மேம்பட்ட தமிழ் உணர்வுடனும் வாழ்வோர் ஈழத்தமிழ் மக்களேயாவர். தமிழினத்தை அழிவிலிருந்தும் இழிவிலிருந்தும் காத்தே தீர வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை நோக்கி தங்களின் அறிவினையும் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி ஆற்றுவித்துத் தமிழ்க்குலத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்கின்றனா அவர்கள். அவர்களின் தாய் நாட்டில் நிலவும் அரசியலும் பிற காரணியங்களுமே அவர்களை அந்நிலைக்கு வலிந்து தள்ளியிருக்கின்றன. என்றாலும், இயல்பாகவே ஈழத்தமிழர்கள் தமிழுணர்விலும், அறிவார்ந்த செயல்பாடுகளிலும் தமிழினப் பிறநாட்டு மக்களைவிட மேலானவர்கள் என்பது வெள்ளிடை மலையெனத் தெள்ளிதின் உணரலாம். தமிழ் ஈழம் காண வேண்டும் என்ற துடிப்போடு அவர்கள் நடத்தும் அறப்போராட்டம் வெற்றி பெற்று, இவ்வுலக உருண்டையில் தமிழர்க்கென்று ஏற்படும் முதல் தனிநாடு என்ற மாபெரும் பேற்றை அடைவார்கள் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

இவ்வாறு உயர்ந்த குறிக்கோளோடு செயல்படும் ஈழத்தமிழ் மக்களுக்கு தோள்கொடுத்து உதவுவது உலகிடையெங்கணுமுள்ள தமிழ் மாந்தர் அனைவரின் கடமை என்று கூறவும் வேண்டுமோ? பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் ஆங்காங்கு வாழும் தமிழின மக்களால் பல்வேறு அமைப்புகள் நிறுவப்பட்டுச் செயல்படுகின்றன. தமிழ்க் கழகங்கள் இல்லாத நாடே இல்லை எனலாம். உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகம் தனது கிளைகளை பற்பல நாடுகளில் பரப்பிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் தமிழ் முன்னேற்றக் கழகம் என்றும், 'ஓர் இயக்கம்' என்றும் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்க ஒன்றிய நாடுகளிலும் பற்பல இயக்கங்கள் தோன்றி எழுச்சியுடன் வினையாற்றிக் கொண்டிருக்கின்றன. அவ்வமைப்புகளில் சிலவே, ஈழத்துத் தமிழின மக்களால் நிறுவப்பட்டு இன்றைய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கு ஊக்கமும் உதவியும் அளித்தும் இவ்வுலக மாந்தருக்கு அவ்விடுதலை இயக்கத்தைப் பற்றி எடுத்துரைத்துக் கொண்டும் ஏற்றமுடன் இயங்குகின்றன. இந்தியத் தமிழின மக்களால் நிறுவப்பட்ட தமிழ் அமைப்புகளோ தெளிவின்றி இயங்குகின்றன; தங்களின் அமைப்புகளை எவ்வழியில் செலுத்த வேண்டும் என்ற தேற்றமின்றி மயங்கி மனம்போனபடி செயலாற்றுகின்றன. ஏன் இந்த அவல நிலை? வீழ்ச்சியடைந்து மதிப்பிழந்து நிற்கும் தமிழினத்தினைத் தூக்கி நிறுத்தும் குறிக்கோளோடு, முனைப்போடு செயலாற்ற வேண்டிய நேரம் இன்னமுமா வரவில்லை?

இவ்வுலகில் அடிமட்டத்தில் கிடந்த இனங்களும் நேற்றைய மழையில் இன்று முளைத்த காளான்கள் போன்ற இனங்களெல்லாம் பல்வேறு இயக்கங்களாலும், முனைப்பான போராட்டங்களாலும் ஈகங்களாலும் தங்களுக்கென்று ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை உரிமையாய்ப் பெற்றுக் கொண்டு தன்மானத்துடனும், மதிப்புடனும், அச்சமின்மையுடனும், களிப்புடனும், செருக்குடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, உலகின் மூத்த இனம் என்று சொல்லத்தக்க இத்தமிழினம் எத்தகைய இழிவு நிலையில் வாழ்கிறது என்பதை எண்ணிப்பாருங்கள்! மதிப்பிழந்தும், பிற இனங்களால் நசுக்கப்பட்டும், மதம் என்ற மாயையாலும் ஒருமைப்பாடு என்ற ஏமாற்றுச் சூழ்ச்சியாலும், தனது மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகளை இழந்து கொண்டும், பிறமொழி பண்பாட்டுத் தன்மைகளைத் தேவையில்லாமல் போற்றிக் கொண்டும், தன்னினத்தின் தனித்தன்மைகளுக்கே உலை வைக்கும் அம்மத, ஒருமைப்பாட்டு வெறிகளில் சிக்கி முழு இனச் சீரழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இத்தமிழினம. இச்சீரழிவினின்றும் இவ்வினத்தைக் காப்பதிலன்றோ கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் உலகத் தமிழ் அமைப்புகளெல்லாம். தெளிவில்லாமலும் மயங்கியும் ஆற்றும் வினைகளால் தமிழினத்துக்கு அழிவுதான் விரைவாகும் என்பதை உணர்ந்து செயலாற்ற முன் வரவேண்டும். அவ்வமைப்புகள், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கோவில்களைக் கட்டுவதிலும், இங்கிருந்து தமிழினவியக்கத்திற்குப் புறம்பான, ஆரியச் சார்பான பார்ப்பனப் பிறமொழிக் கலைஞர்களை வருவிப்பதிலும் தாலர்களாகவும்; மார்க்குகளாகவும், பிராங்குகளாகவும் அள்ளி இறைப்பதனால், ஆகும் பயன் என்ன? ஆரிய வேதநெறியும் சமற்கிருதமும், தமிழல்லாத வேற்றுமொழிப் பாடல்களும் பிறகலைகளும் தாம் ஆக்கமும் ஊக்கமும் பெறுகின்றன. இவ்வகை உலகத்தமிழர்களின் அமைப்புகளால, இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியது கட்டாயமும், கண்டிப்பானதுமாகும். தமிழின முழுமீட்சியைப் பற்றிக் கவலைப்பட்டு எண்ணிச் செயலாற்ற உடனடியாக முன் வரவேண்டும் இவ்வமைப்புகள்.

தமிழின முழு மீட்சிக்கு ஆற்றக் கூடிய உறுதிப்பாடான செயல்பாடுகளில், தமிழர்களுக்கென்று ஒரு தனி நாடாம் தமிழ் ஈழம் காணப் போராடும் இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பது என்பதைவிடச் சிறந்தது வேறெதுவும் இருக்க முடியாது. இலண்டன் பாரீசு, நியூயார்க்கு, வாசிங்டன், பெர்லின் போன்ற ஐரோப்பிய அமெரிக்க ஒன்றிய நாடுகளின் பெருநகரங்களை நிலைக்களங்களாகக் கொண்டு இயங்கும் தமிழமைப்புகள் யாவும் ஒன்றுகூட வேண்டும்; ஒன்றுகூடி ஈழத் தமிழ் மறவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு அளித்துக் கடனாற்ற வேண்டும். உலகத் தமிழினம் அனைத்திற்குமான ஒட்டுமொத்தக் கடமை தமிழீழ இயக்கத்திற்குக் கைகொடுப்பதாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டு அஞ்சி அஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த தமிழினத்திற்கு வாராது போல வந்த மாமணியாய் முளைத்தெழுந்த இத்தமிழின எழுச்சியாம் ஒளிச்சுடரை, அணையாமல் என்றும் ஒளிப்பிழம்பாய்த் திகழ்ந்து கொண்டிருக்கச் செய்ய வேண்டுவது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனின் கடமையாகும்.

இரண்டு செய்திகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

கேரளாவில்!
சட்டமன்ற உறுப்பினர் மனைவி கூலிவேலைசெய்து குழந்தைகளைக் காப்பாற்றுகிறார்!

கேரள மாநிலத்தில் உள்ள மூணாறு தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் திரு. வரதன் (அகவை 51) ஒரு தமிழர். இவர் தமிழர்கள் மிகுதியாக வாழும் மூணாறு பகுதி உறுப்பினர். இவர் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்.

இவர் மனைவி இராணி (அகவை 48) என்னும் இரஞ்சிதா என்பவர் ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி. இவர் அங்குள்ள 'கிரகாம்சு லேண்ட்' என்னும் தேயிலைத் தோட்டத்தில் அன்றாடக் கூலித் தொழிலாளியாக வேலை பார்த்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்.

அதிகாலையில் 6 மணிக்கு எழுந்து பணிக்குச் செல்லும் இரஞ்சிதா ஒரு நாளைக்கு 14 அயிரை (கிலோ) தேயிலை பறித்து விடுகிறாராம்.

அது மட்டுமில்லை, இரஞ்சிதா தம் கணவரான சட்டமன்ற உறுப்பினருடனும், குழந்தைகளுடனும் தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியிலேயே, ஓர் அறையில் வாழ்ந்து வருகிறார். இவர்கள் குடியிருக்கும் அறையில் மின்சார விளக்குகள் இல்லை.

'கணவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது நீங்கள் எதற்காகக் கூலி வேலை செய்து வருகிறீர்கள்?' என்று அவரைக் கேட்டார்கள்? அதற்கு அவர் சொன்ன விடை மேலும் வியப்பை அளித்திருக்கிறது.

கடந்த காலத்தில் நெருக்கடி நிலையின் பொழுது என்னுடைய கணவர் நான்கு மாதம் சிறையில் இருந்தார். நான் அக்காலத்தில் தேயிலைத் தோட்டத்தில் கூலியாக வேலைசெய்து தான் என் குழந்தைகளைக் காப்பாற்றி வந்தேன். என் கணவருக்கிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் பதவி நிலையானது ஆகிவிடாது. அவர் வேலையில்லாத பொழுது என்ன செய்வது? எனவேதான் என் வேலையைத் தொடர்ந்து செய்து வருகிறேன். எந்தத் தொழிலையாகிலும் செய்து நேர்மையாக வாழ்வதைப் பெருமையாகக் கருதுகிறேன். தொழிலில் எதுவும் இழிவு இல்லை' என்று கூறியிருக்கிறார்.

இரஞ்சிதா படிக்காதவர். எழுதப் படிக்கத் தெரியாது. இருப்பினும் இவர் கூலி வாங்கும் பொழுது தமிழில் கையெழுத்துப் போடுகிறார். இரஞ்சிதா போலும் சட்டமன்ற உறுப்பினர்களின் மனைவி தமிழ்நாட்டில் ஒருவரேனும் இருப்பாரா என்பது ஐயமே!

தமிழ்நாட்டில்!
உருபா இரண்டு கோடி செலவில்
தமிழக அமைச்சர்களுக்கு 24 வளமனைகள்!

தமிழக அரசில் அமைச்சர்களாக உள்ள 24 பேர்களுக்கும், தமிழக அரசு வளமனைகள் கட்டித்தர முன் வந்துள்ளது. இதற்காக இரண்டு கோடி உருபாவை ஒதுக்கியிருக்கிறது. இந்த வளமனைகள் 1983-ஆம் ஆண்டு முடிவிற்குள் கட்டித் தரப்படும் என்று தெரிகிறது.

★

அன்பர்கள் மேலுள்ள இரண்டு செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இங்குள்ளவர்களும் 'பச்சைத் தமிழர்கள்தாம். கேரளாவில் மூணாறில் வாழும் சட்டமன்ற உறுப்பினர் திரு. வரதன் அவர்களும் அவர் மனைவியாகிய இரஞ்சிதாவும் தமிழர்கள் தாம்! ஆனால் அவர்களின் எளிமைக்கும் இங்குள்ள தமிழர்களின் செல்வக் கொழிப்பான வாழ்க்கைக்கும் எத்துணை வேறுபாடு! மக்களைச் சுரண்டி வாழவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களுக்கும், மக்களுக்காக வாழவேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் நடைமுறையில் எத்தனை வேறுபாடுகள் உள்ளன, பாருங்கள்!

●

"மா"த் தமிழ் இன்பம்

எண்ண எண்ண, ஈடில்லா இன்பந் தரும்—சொல்லச் சொல்ல சுவை யாவும் அள்ளித்தரும் நம் வண்ணத் தமிழில் எத்தனை எத்தனையோ தித்திப்புகள்! தீங்கனிச் சாறுகள்! இனிப்பு நயங்கள்! எழிலான தேனடைகள்! அணிநலன்கள்! அழகுச் சிலிர்ப்புகள்! சிரிப்பு விருந்துகள்! சிந்தனையின் சுவை ஊற்றுகள்! அங்கும் இங்கும் இன்றி எங்கெங்கும் தங்கு தடையின்றி ஒவ்வோர் எழுத்திலும், சொல்லிலும், சொற்றொடரிலும் தொடர் மொழியிலும் விரிந்தும் பரந்தும், மறைந்தும் நிறைந்தும் சிறந்தும் கிடக்கின்றன; இவ்வின்பப் பெருக்கைச் சான்றோர்களின் உரையிலும் பாடல்களிலும் கண்டு இன்புறலாம். இதனாலன்றோ ''இருந்தமிழே உன்னால் இருந்தேன்: இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'' என்று தமிழ்விடு தூது ஆசிரியரும், ''மங்கை ஒருத்தி தரும் இன்பம், என் மாத்தமிழுக்கு ஈடாமோ'' என்று பாவேந்தரும், ''தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ் மேல் தான் வீழ்வேன் தனியனாய் நின்றாலும் என் கொள்கை மாறேன்'' என்று பாவலரேறும் முழங்கினர் போலும்.

அமிழ்தத்தையும் விஞ்சும் இத்தமிழ்ச் சுவையை நாம், நம் உடலில் உயிர் உலாவுகின்றபோதே, அரத்த நாளங்களின் சூடு தணியுமுன்னே, நரப்புக் கட்டின் விறைப்பு குறையுமுன்னே கட்டாயமாகக் கற்றறிதல் வேண்டும்; இன்றேல் கற்றார் வழியேனும் கேட்டறிதல் வேண்டும். அன்றே நாம் முழு மாந்தராவோம்.

தமிழ் பாடிய சான்றோர் பலருள்ளும், குழுகாய நலனுக்கே சமயத்தைப் புகுத்தி, புதுக்கிப் புரட்சி செய்த வெள்ளாடைத் துறவி கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போகப் பாடிய அரும்பாவலர் பகுத்தறிவு ஒளியை முதன் முதல் ஏற்றிய 19 ஆம் நூற்றாண்டுப் பெரியார்—வள்ளல் இராமலிங்கர், தாம் பாடிய 'திருவருட்பா' எனும் பாத் தொகுதியில் வெறிவிலக்கு எனும் பகுதியில் வரும் பாடலில் ஒரே எழுத்தை 19 இடங்களில் பெய்து இலக்கியத் தமிழின்பம் தருகிறார்.

தலைவி ஒருத்தி தலைவன் ஒருவனுடன் மையல் கொள்ளுகிறாள்; அவளைக் காதல் நோய் வருத்துகிறது; ஊரில் அலர் தூற்றப்பெறுகிறது; பழிச்சொற்கள் பலராலும் பேசப்பெறுகின்றன. இதனை மாற்ற ஆடு ஒன்றை வெட்டி, பூசை நடத்த வேலனால் முயற்சி மேற் கொள்ளப்பெறுகிறது. இந்நிலையில் வள்ளலார் உள்ளம் பேசுகிறது பாருங்கள்.

என்ன வியப்பு? இந்த ஆடு உங்களை இந்தப் பிறவியில் என்ன செய்தது? தாயே! மன்மதன் இதைக்கண்டு அஞ்சுவானா? (5மா) அதனால் இவள் துன்பம் ஆறுமா (6மா) இந்த முயற்சிகள் தலைவனுக்கு எட்டுமா (8மா)

இந்தப்பொருள் தரும் பாடல் இதோ!

இம்மை யனையனைய வேசூர .மா தருமா
இம்மையுமை யிம்மையையோ
வென்செய்த—தம்மைமதன்
மாமாமா மாமாமா மாமர்மா மாமாமா
மாமாமா மாமாமா மா.

குறிப்பு. இம்மையல் + தையல் + நைய;
ஏசு + ஊர; மாதரும் + ஆ
இம் + மை(ஆடு) உமை;
இம்மை + ஐயோ; அம்மை + மதன்
5மா (அஞ்சுமா); 6மா (ஆறுமா)
8மா (எட்டுமா) $5+6+8=19$மா.

புலவர். நாவை. சிவம் இல. இ; கல். இ.

உங்கள் மடல்கள்

○ ...... உலகில் எந்தத் தமிழருக்கும் இல்லாத தனி அக்கறையால், போற்றுதற்குரிய தங்கள் உடல் நலனையும் பொருட்படுத்தாமல், மொழி, இன, நாட்டு முன்னேற்றத்திற்கு முழு நேர ஊழியராக்கிக் கொண்ட தாங்கள் உலக வரலாற்றில் தனி இடம் பெற்று விட்டீர்கள். தங்களின் எல்லா முயற்சிகளும் வெல்லட்டும் என்று வாயார, நெஞ்சார வாழ்த்தி மகிழ்கிறேன்.

— **புலவர். நாவை. சிவம்,** இல. இ; கல். இ; மணப்பாறை.

○ ...'தமிழீழ விடுதலை வரலாறு' எழுதும் முகுந்தன் அவர்களின் எழுத்து வரிகளைப் படிக்கின்றபொழுது, இன்றுள்ள அரசியல்காரர்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது. மொத்தத்தில் தமிழ்நிலம் எங்களைப்போன்ற இளைஞர்களின் தமிழின உணர்வை உருக்கும் உயர்ந்த இதழ்!

—**தாரை. வே. இளமதி,** சென்னை—2.

○ தமிழினத்துக்காகத் தாங்கள் தொடங்கியுள்ள 'தமிழ் நிலம்' இதழ் அருமையாக உள்ளது. கட்டுரைகளும் கருத்துகளும் நன்கு சிந்திக்க வைக்கின்றன. தங்கள் பணிக்கு என் ஒத்துழைப்பும் வாழ்த்தும் உரியவாகட்டும்! இவ்விதழை வரவேற்பது தமிழர் ஒவ்வொருவரின் கடமை!

— **தமிழன்பன்,** காங்கயம்.

○ ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாக அறியாமை, கோழைத் தன்மை, காட்டிக் கொடுக்கும் கயமைத் தன்மை ஆகியவற்றால் வேற்றவர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ் நிலத்தினையும் தமிழின மக்களையும் தட்டி எழுப்பிப் புத்துணர்ச்சி ஊட்டிக் கிளர்ந்தெழச் செய்ய உரிமை வேட்கை எனும் வித்தினை விதைத்திடப் புதிதாகத் தொடங்கப் பெற்றிருக்கும் 'தமிழ் நிலம்' தாளிகை பல்லாண்டு, பல்லாயிரம் ஆண்டு வாழிய வாழியவே!

— **செ. முத்துஅடிகள்,** துறையூர்.

● தமிழர்களுக்கு என்று இதுவரைக்கும் ஓர் ஏடு கூட இல்லை என்ற குறையை நீக்கியும், தமிழர்களுக்கு உண்டாகும் தீங்கினை எடுத்துக் கூறி, அவற்றைக் களையும் ஏடொன்றாகத் 'தமிழ் நிலம்' பல சிறப்புகளையும் பெற்று வருவதை உள மகிழ்வுடன் ஏற்கிறோம். மேலும் நாளிதழாக வளர வேண்டுகின்றோம்.

—**மா. செவ்வேள்,** சேலம்-14.

● ......'தமிழ் நிலம்' தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனியட்டும்!

—**க. பெ. நெடுமாறன்,** வடக்கநந்தல்.

○ ...நாள்கூலித் தொழிலாளி, தென்மொழி வாசகன், தமிழ் நில விடுதலை மறவன் எழுதுவது ... நாங்கள் வேடிக்கைத் தமிழர்கள் இல்லை எனக் காட்டித் தமிழ் நிலம் தொண்டு தொடர வேண்டும்.

— **கா. சோமசுந்தரம்,** கூறைநாடு.

○ ...'தமிழ் நிலம்' இதழ் கண்டு களிப்புற்றேன். இது தமிழர் பெருமக்களுக்கும், நம்மினத்திற்கும் கட்டாயம் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் ஏன்பது உறுதி. என்னுடைய மகிழ்ச்சியான வாழ்த்துகள்!

— **வே. ஆறுமுகம்,** புதுச்சேரி-10.

● 'தமிழ் நிலம்' இதழினைத் தொடர்ந்து பெற்றுப் படித்து வருகின்றேன். மறத் தமிழர்களான நாம், நம் வீரத்தை தொன்மையுறு மாண்பை, இப்பொழுது மறந்த தமிழர்களான நிலையில் காண்கிறோம். நமது தமிழ் நிலம் மக்களைத் தட்டியெழுப்பித் தாய்த் தமிழை, தாய் நாட்டினை விழிப்புறச் செய்யக் கடும் புலியெனப் பாய்ச்சலில் புறப்பட்டுள்ளது. வளர்க அதன் மெய்ப்பாடு! வீழ்க தமிழின எதிரிகள்! ஒன்றுபடுவோம்! தமிழினத்தை நிலைநாட்டிக் கவடர்களை நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொடுப்போம்! வாழ்க ஆசிரியரின் தொண்டு! வளர்க அவர் அரும் பெரும் வாழ்நாள்!

— **வ. மதிவாணன்,** சித்தேரிப்பட்டு (தெ. ஆ.)

○ ...தமிழினத்தைப்பற்றிக் கவலைப்படும் தானைத்தலைவர் தாங்கள் ஒருவர்தாம் என அழுத்தமாய்க் கூறுகிறேன். இந்த அனைவரும் பணம் பதவிகளைத் தேடி அலையும் வேளையில், தாங்கள் மட்டும் தமிழினத்திற்குப் பாடுபட்டு வருகிறீர்கள்...இன நலம் காக்கும் தலைவரே! என்னைப் போன்றோரைத் தாங்கள் வழி நடத்திச் செல்ல வேண்டும்! தமிழினத்தைத் தட்டி எழுப்பிச் சொரணை உண்டாக்கிப் பகுத்தறிவுப் பாதையில் நடத்திச் சென்று ஒன்றுபடச் செய்ய வேண்டும். தந்தை பெரியார் வழி நின்று, உறுதியுடன் செல்லும் ஒரே ஒருவர் தாங்கள் தாம்! என்றும் வாழ்க! தரங்கெட்ட தாள்கள் பல வெளிவரும் இவ்வேளையில், தக்க நேரத்தில் நல்ல தமிழ் இதழ் வெளிவருவது எங்களுக்குத் தேனாக இனிக்கிறது. வாழ்க தங்கள் தமிழ்த் தொண்டு.

— **ஏ. கணேசன்,** அரியலூர்.

○ வறண்டுபோன எண்ணங்களிடையில், புதிய உணர்வுடன் புதிய வழி முறையில், நமது இனம் மொழி நலம் பெற்று, விழிப்புற்று, எழுச்சி பெறவும், கடல் கடந்து பல நாடுகளில் வாழினும், நமது அன்னை ஒன்றே, நமது பண்பாடு ஒன்றே எனும் எண்ணங்களை நினைவூட்டித் 'தமிழ் நிலம்' செழிப்படைய வேண்டுகின்றேன்.

— **இரமணிச்சந்திரன்,** போர்ட்பிளேயர், அந்தமான்.

● 'தமிழ் நிலம்' கிழமையிதழ் தொடக்க நாளன்று தங்களின் உரை கேட்க சென்னை வந்து, தங்களின் சொற் பெருக்குக் கேட்டுத் தமிழினத்திற்கு இனித்தொய்வில்லை. உய்யும் வழி உயர் தலைமை ஏற்பட்டு விட்டதாக, உள்ளத்தெம்பு பெற்று ஊர் வந்தேன்...'தமிழ் நிலம்' தொடர்ந்து நற்பணியாற்றிப் பரந்துபட்ட தமிழினத்திற்குத் தொண்டாற்ற வலிவும் பொலிவும் பெற என்னின் அன்பு வாழ்த்துகளை உரித்தாக்குகின்றேன்.

— **வெ. மகராசன்,** வளையபட்டி.

○ உணர்வு கெட்ட தமிழனுக்கு இங்கே ஊணர்வை ஊட்டிடவும், தினவு கொண்ட தமிழ்நிலத் தாளிகை தீயாய் மூண்டிடவே!

மொழியை இனத்தைச் சிதையச் செய்யும், மூடக் கரையான்கள், அழியப் பாடுகள் நாளும் ஆற்றி ஆல்போல் வாழியவே!

— **பாவலர் எல்லோன்,** பரமக்குடி.

○ குறைந்த கால அளவில் உழைப்பினாலேயே உலகு புகழ் பெற்ற சப்பான் நாட்டினைப் போன்று, தேய்ந்துபோன தமிழர்கள் தமிழ் நிலத்தின் வருகையால் மீண்டும் வளர்வார்கள்! நானிலம் முழுதும் தமிழின் புகழ்பாடு காலம் வரும் அதை உருவாக்க ஏறு நடையுடன் நடக்கத் தொடங்கியுள்ள தமிழ்நிலம் சீர் பெற வாழ்த்தி வரவேற்கிறேன்.

— **இளவல் இலக்குவன்,** கீழ்குந்தை.

○ தங்கள் நலம் மேன்மேலும் திருவோடிருக்க எல்லாம் வல்ல இறையருள் தங்கட்கு வழங்க வேண்டுகிறேன். 'தமிழ் நிலம்' தமிழ் மக்களுக்கு ஒரு பொன்னுள் வரப் போகிறது என்பதற்கு வித்தாக அமையப் போவதில் ஐயம் சிறிதும் இல்லையென்று வீறுடன் விளம்புவேன்.

— **வீ. வில்வநாதன்,** பெங்களூர்-16.

○ தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு இம்மூன்றின் முன்னேற்றமே உயிர் மூச்சாகக் கொண்டு வெளிவரும் தமிழ் நிலம் வாழ்க! வளர்க! என வாழ்த்தும்!

—**நா. நடேசன்,** க. மு. திருப்பராய்த்துறை.

★ தமிழர்தம் வாழ்வில் பகுத்தறிவுப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்பிடத் 'தமிழ் நிலம்' தழைத்துச் செழித்தோங்கிப் புகழ் அடைக என்று வாழ்த்தும், தென்மொழி சுவைஞன்,

—**சி. சாகுல்அமீது,** பழனி.

● 'தமிழ் நிலம்' இதழ் கண்டு சிலர் அலறுகின்றனர்; சிலருக்கு ஆட்டம் கண்டு விட்டது. எதிர்கால வளர்ச்சியை எண்ணிச் சிலர் மனம் கரைந்து, குமுகாயத்தில் பக்குவமாகவே நடந்து கொள்ள உளம்கொள்ளுகின்றனர். தங்களின் புரட்சிகரமான எண்ணத்திற்கும் எழுத்திற்கும் இளைஞர்களின் நடுவிலும், மிகப்பெரும் வரவேற்பு இருப்பதைக் கண்கூடாக நான் கவலுகின்றேன்.

—புலவர்.
— **துரை. காசிநாதன்,** பெண்ணாகடம்.

● தமிழ்நிலம் மலர்தல் கண்டு கழிபேருவகை கொள்கின்றேன். எம் போன்ற என்னரும் தமிழர்களின் பேராவல் ஓரளவு நிறைவெய்தும் என்ற மகிழ்ச்சியில் தங்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

—**பி. பட்டாபிராமன்,** இல. இ., வேட்டவலம்.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் நல்லது நம்முடைய இனத்துக்கு!

தமிழே பேசுகிறவர்களைத் தேடி, நாம் உலகத் தமிழின முன்னேற்றம் அமைத்துவிட முடியாது! கட்டாயம் முடியாது! ஏனென்று சொன்னால், இங்கே சிங்கையிலே போய் வாழுகின்ற பல தமிழர்களுக்கு, அவர்களுடையத் தாய் மொழி ஆங்கிலமாகவே போய்விட்டது சிலருக்கு, அந்தமானிலே வாழுகின்ற சிலருக்கு, அவர்களுடைய தாய் மொழி "வங்காளி"யாகவே போய்விட்டது. இந்த நிலைகளையெல்லாம், நாம் மிக ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும்."

(தொடரும்)

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர்.
நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.